பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 23 திங்கட்கிழமை 10.10.2022 கதிர் 337

### இது ரகசியம் அல்ல!

யாழ்மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நடத்தும் திருவிழாக்களைப் பார்த்தால் அவர் திருந்தார் என்றே தோன்றுகின்றது. இது விடயத்தில் அண்மைக்காலத்தில் இப்பத்தியில் நான் எழுதிய சில வசனங்களை முதலில் நினைவூட்டுவது தான்

2

# தேர்தல் சட்டங்களை மாற்றியமைத்த பின்னர்தான் உள்ளூராட்சித் தேர்தல்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திட்டவட்டம் உறுப்பினர் எண்ணிக்கையும் அரைவாசியாக்கப்படுமாம்

**கொழும்பு, ஒக்டோபர் 10**

அடுத்த தேர்தலுக்கு முன்னர் பிரதேச சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாகக் குறைத்து, உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் ஜனசபா திட்டத்தையும் நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

13



### யாழில் தாக்குதல் சந்தேகநபர் 3 கூரிய வாள்களுடன் கைது!

யாழில் இயங்கி வரும் ஆயுதமேந்திய ...ம்பலைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் ...மூன்று கூரிய வாள்களுடன்

13

### டிராக்டர் புரண்டதில் சம்பூரில் ஒருவர் பலி



திருகோணமலை மாவட்டம், சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிப்பகுதியில் நேற்றுக்

13

## இலங்கையின் கடற்பரப்பின் ஊடாக பயங்கரவாதத் தாக்குதல் வரலாமாம்!

### சென்னை உயர் நீதிமன்றில் பொது நல வழக்கு தாக்கல்

இலங்கையின் கடற்பரப்பின் ஊடாக இடம்பெறக் கூடிய பயங்கரவாத சாத்தியக் கூறுகளை சமாளிப்பதற்கு பயங்கரவாத தடுப்பு பிரிவு ஒன்றை அமைக்குமாறு தமிழக அரசாங்கத்துக்கு உத்தரவிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணியான பி.ஜெகன்நாத் என்பவரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை, பொருளாதார

13

### வீடு வீடாகத் தகவல் திரட்டுவதை பொலிஸார் நிறுத்துவர் என உறுதி



கொழும்பு மாவட்டத்தில் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி உள்ளிட்ட பிரதேசங்களில் வீடு வீடாகச் சென்றுப் பொலிஸார் தகவல்களை

13

### 3 இராணுவ அதிகாரிகள் மீது கனடா தடைகளை விதிக்கும்

இலங்கையைச் சேர்ந்த மூன்று இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக கனடா தடைகளை விதிக்கவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானம்

13

## காலி முகத்திடலில் கலைத்துக் கலைத்துப் பலர் கைது!

### அமைதியான போராட்டத்தை களேபரமாக்கிய பொலிஸ்





கொழும்பு, காலி முகத்திடலில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் நேற்று மாலை பெரும் பதற்ற ...லை ஏற்பட்டது.

அங்கு நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். காலி முகத்திடல் மைதானத்திற்குள் உள்நுழைந்து பொலிஸாரால்

13

### நடிகை நயன்தாராவுக்கு இரட்டைக் குழந்தைகள்



நடிகை நயன் தாரா மற்றும் விக்னேஷ் சிவன் இருவரும் கடந்த ஜூன் 9 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டனர்.

அதன் பின் அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று வந்த போட்டோக்களை

2

## சொத்துக்களைச் சேதப்படுத்தியவர்களில் 200 பேர் கைது; 200 பேர் தலைமறைவு!

அண்மையில் இடம்பெற்ற போராட்டத்...ன் போது அரச சொத்துக்களுக்கு சேதம் ...விளைவித்தல் உள்ளிட்ட குழப்பங்களை ...விளைவித்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ...04 பேரில் இதுவரையில் 200 பேர் ...கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக ஊடகங்களின் வாயிலாக குற்றச் செயல்கள் மற்றும் குழப்பங்களை விளைவித்த சுமார் 400 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும் இவர்களில் சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

13

## மீண்டும் சொல்ஹெய்மின் பங்களிப்பு ரணிலின் அழைப்பில் இங்கு வருவார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்புக்கு இணங்க நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள பொருளாதாரம் மற்றும் சமூக ஸ்திரத்தன்மை

13



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமானது.

'விநாச காலே விபரீத புத்தி.'

'கெடுவான் கேடு நினைப்பான்.'

இப்போதைய விடயத்துக்குள் இறங்க முன்னர் பழைய விவகாரம் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். யாழ் மாநகர சபை உறுப்பினராக மணிவண்ணன் இம்முறை தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து ஒரு வாக்காளர் சார்பில் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுதாரருக்காக வாதாடினார். மணிவண்ணன் யாழ் மாநகர சபை உறுப்பினராகச் செயல்பட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. சுமார் ஒன்றரை வருடத்திற்கு அதிக காலம் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில், உறுப்பினராகத் தெரிவாகியும், உறுப்பினராகச் செயல்பட முடியாமல் வெளியில் தூங்கினார் அவர். கஜேந்திரகுமார் தரப்பிலிருந்து அதிருப்தி குழுவாக அவர் வெளியேறியமையை அடுத்து, அந்த அரசியல் சூழ்நிலையின் பின்புலத்தில், சட்டத்தரணி சுமந்திரன் ஒரு சகாயமாக வழக்கை வாபஸ் பெற்றார். அதனால் மீண்டும் உறுப்பினராகி பின்னர் மேயரானார் மணிவண்ணன்.

இப்போது அந்த கதை ஏன் என்ற கேள்வி எழலாம். காரணம் உண்டு. அது என்ன வழக்குத் தெரியுமா? தான் யாழ் நகரப் பிரதேசவாதி என்பதை நிரூபிக்க மணிவண்ணன் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட உறுதி ஆவணம் ஒன்றில் திகதி மோசடி மாற்றம் என்ற குற்றச்சாட்டுத் தான் பிரதானமானது. அதன் அடிப்படையில் தான் இடைக்காலத் தடை கூட விதிக்கப்பட்டது.

வழக்குத் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு இருந்தால் மாநகர சபை உறுப்பினர் தெரிவு மட்டும் அல்ல, அதையும் தாண்டி பல விபரீதங்கள் நிகழலாம், ஓர் இளம் சட்டத்தரணியின் எதிர்காலத்தைச் சிக்கலில் மாட்டக்கூடாது, அது வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் சுமந்திரன் அந்த வழக்கை விலக்கிக் கொண்டார் என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன்.

இப்போது ஏன் இந்த கதை? தண்ணீர் கூட பல தடவைகள் மன்னிக்காது. ஒரு தடவைதான் மன்னிக்கும்.

இப்போது மீண்டும் ஒரு தஸ்தாவேஜு மோசடி.

யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரினதும் செப்டெம்பர் மாதக் கொடுப்பனவை மேயர் தடுத்து நிறுத்தியமை தொடர்பில் நேற்று விவரித்து இருந்தேன்.

ஜப்பான் தூதரகம் வழங்கிய நிதியை மீளளிப்பதை ஒட்டி எழுந்த முரண்பாடு இந்த சர்ச்சைகள் எல்லாவற்றுக்கும் காரணம். நான் அவற்றை விலாவாரியாக விவரிக்கப் போவதில்லை - விடயம் நீண்டு விடும் என்பதால்.

அந்தப் பணத்தை திருப்பி செலுத்தும் இணக்கத்தை ஜப்பான் தூதரகத்துக்கு தான் வழங்கவில்லை, யாழ். மாநகர ஆணையாளரும், தாம் விடுமுறையில் இருந்த சமயம் பதில் மேயர் ஈசனும்தான் வழங்கினர் என்று புரட்டு உரைப்பதற்கு மீண்டும் தஸ்தாவேஜு மோசடி பண்ணி இருக்கின்றார் மேயர்.

05-05-2022 திகதியிட்டு மேற்படி பணத்தை மீளளிப்பதாக ஜப்பான் தூதரகத்துக்கு யாழ் மாநகர ஆணையாளர் அனுப்பிய கடிதம் என்று ஒன்றை நேற்று செய்தியாளர் மாநாடு கூட்டி, யாழ். மேயர் வெளியிட்டு விநியோகித்திருக்கின்றார். அதுதான் அந்த மோசடி தஸ்தாவேஜு. அந்த மோசடி தொடர்பில் பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்டுவது பொருத்தம்:-

1. உண்மையில் 05.05.2022 திகதியிட்டு ஜப்பான் தூதரகத்திற்கு மாநகர ஆணையாளர் அனுப்பிய கடிதத்தின் உண்மை பிரதியை நேரத்துடனே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாம் உறுதிப்படுத்தி பெற்றிருந்தோம். அதன் பிரதி நம்மிடம் உள்ளது. நேற்று மேயர் வேறு ஒரு கடிதத்தை அத்திகதியிட்டு விநியோகித்திருக்கின்றார்.

2 இந்த விவகாரத்தை ஒட்டிய அனைத்து கோப்புகளின் பிரதிகளும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் ஏற்கனவே யாழ் மாநகர சபையிடமிருந்து அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. அங்கும் உண்மை பிரதி இருக்குமென நம்புகிறோம்.

3. உண்மையில் மாநகர ஆணையாளர் அனுப்பிய கடிதத்தின் கடிதத் தலைப்பின் தொடர் இலக்கம் 48201. ஆனால் நேற்று மாநகர மேயர் வெளியிட்ட கடிதத்தின் கடிதத் தலைப்பு இலக்கம் 45830. கடிதத் தலைப்பு வடிவங்களிலும் மாற்றம் உள்ளது.

4.ஆணையாளர் அனுப்பிய உண்மை கடிதம் நான்கு பந்திகளில் இருந்தது. மேயர் மணிவண்ணன் நேற்று ஆணையாளரின் கடிதம் என சமர்ப்பித்த ஆவணத்தில் மூன்று பந்திகளே இருந்தன. முக்கியமான ஒரு பந்தியை விழுங்கி விட்டனர்.

5. உண்மையான கடிதத்தில் "........ காரணங்களினால் நாங்கள் திட்டத்தை ரத்து செய்து உரிய பணத்தை தூதரகத்திற்கு மீளளிப்புச் செய்யத் தீர்மானித்திருக்கின்றோம்" என்ற சாரப்பட ஆங்கில வசனம் அமைந்திருந்தது.

ஆனால் நேற்று மேயர் வெளியிட்ட கடிதத்தில் "........காரணத்தினால் நாங்கள் அந்தத் திட்டத்தை ரத்து செய்து உரிய பணத்தை ஜப்பான் தூதரகத்திற்கு மீளளிப்புச் செய்ய இணங்குகிறோம்'' என்ற வசனம் காணப்பட்டது.

'ரத்து செய்ய நாங்கள் தீர்மானித்தோம்' என்று குறிப்பிட்டு, தாங்கள் முடிவெடுத்து ஒப்புக் கொண்டோம் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தை 'ரத்துச் செய்ய இணங்குகிறோம்' என்று மாற்றி, ஜப்பான் தூதரகத்தின் முடிவுக்கு வேறு வழியின்றி இணங்குகின்றோம் என்று வெளிப்படுத்துவதும் இந்த மோசடியின் நோக்கம் போலும்.

6. இந்தக் கடிதம் தனக்குத் தெரியாமல் அனுப்பப்பட்டது என்று காட்டுவதற்காக இந்த மோசடியில் இன்னொரு கைங்கரியத்தையும் மேயர் ஒப்பேற்றியிருக்கின்றார். ஆணையாளர் ஜப்பான் தூதரகத்திற்கு அனுப்பிய உண்மைக் கடிதத்தில் மேயருக்கும் ஒரு பிரதி அனுப்பப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் நேற்று மேயர் வெளியிட்ட ஆணையாளரின் கடிதத்தில் எவருக்கும் பிரதி அனுப்பப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படவில்லை. அதாவது அந்தக் கடிதம் அனுப்பப்பட்டமை தமக்குத் தெரியாது என்று காட்ட மேயர் எடுத்த ஆவண தந்திரோபாயம் இது.

7.ஆனால் இந்த இரண்டு கடிதங்களிலும் ஆணையாளரின் ஒப்பம் இருந்தது.

அத்துடன் இன்னொரு விடயமும் நோக்கப்பட வேண்டியுள்ளது. ஆணையாளர் அனுப்பிய கடிதம் தொடர்பில் கடந்த 27 ஆம் திகதி மாநகர சபையின் அமர்வில் கடிதம் தமக்குத் தெரியாமல் ஜப்பான் தூதரகத்துக்கு ஆணையாளர் அனுப்பினார் என்று எதுவும் கூறாத மேயர், நேற்றுத் தான் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் ''அக்காலத்தில் நான் விடுமுறையில் பிரான்ஸ் நாட்டில் நின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதில் முதல்வரான து.ஈசனுடன் இணைந்து எனக்கும் தெரியாமல் ஆணையாளர் கடிதம் அனுப்பி விட்டார்'' எனவும் குறிப்பிட்டார். இவை தொடர்பில் மாநகர ஆணையாளர் த. ஜெயசீலனைத் தொடர்புகொண்டு எந்த முதல்வரின் வழிகாட்டலில் கடிதம் அனுப்பி, எவருக்கு பிரதி வழங்கினீர்கள் எனக் கேட்டபோது -

"இந்த சர்ச்சையில் அரசியல் சார்ந்த விடயங்களிற்கு என்னால் பதிலளிக்க முடியாது. ஆனால் நிர்வாகம் சார்ந்த விடயங்களிற்குப் பதிலளிக்க முடியும்.

"ஜப்பான் தூதரகத்திற்கு நிதியை மீள வழங்குவதான கலந்துரையாடல்களிலும் ஜப்பான் தூதரகம் அனுப்பிய கடிதம் முதல் கொண்டு அனைத்திலுமே மாநகர முதல்வர் வி.மணிவண்ணனே பங்குகொண்டார் என்பதுடன் என்னால் ஒப்பமிட்டு அனுப்பிய 2022.05.05 திகதிய கடிதத்தை அனுப்புமாறும் வி.மணிவண்ணனே எனக்குக் கூறினார், அவருக்கே பிரதிக் கடிதமும் அனுப்பினேன்." - என்றார்.

இந்த விடயங்கள் தொடர்பில் மேலும் பல ஆவணங்கள், ஆதாரங்கள் உள்ளன. இந்த ஆவண மோசடி தொடர்பில் மேயர் மேலும் சவாலுக்கு உட்படுத்துவாராயின் அவற்றை நம் ஊடகத்தில் நாம் வெளியிட வேண்டி இருக்கும். தஸ்தாவேஜு மோசடி என்பது சிறிய விவகாரம் அல்ல, மோசமான விளைவுகளைத் தரவல்லது என்பது சட்டத்தரணியான மேயருக்கும் தெரியும் என்று நம்புகிறோம்.

**- மின்னல் -**

## நடிகை நயன்தாராவுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகம் வெளியிட்டிட்டு வந்தனர்.

இந்நிலையில் தற்போது யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அவர்களுக்கு இரட்டை குழந்தை பிறந்திருப்பதாக குறிப்பிட்டு போட்டோவுடன் விக்னேஷ் சிவன் அறிவித்து இருக்கிறார்.

அவர்கள் வாடகை தாய் மூலமாக குழந்தை பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது.




**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகள் 17.10.2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course – 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
» Follow course in NVQ level 5
»Register for drawings at local councils

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
» Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
»Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw
» Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
»AutoCAD 2D & 3D Modeling
»Java, C++ Programming
» Accounting Package Tally

**Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too**

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
» அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் -Aluminum Fabrication

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**
**Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk**

Search Facebook
V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

VISA

அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244
0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | -0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஜனநாயகப் படுகொலை

எது நடக்கப் போகின்றது என்று இப்பத்தியில் முன்னர் எச்சரித்தோமோ அதுதான் நடக்கப் போகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்களும் நடைபெறாமல் போகப் போகின்றன என்பதுதான் கண்கூடாகத் தெரியும் விடயம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நேற்றைய அறிவிப்பு அதைத்தான் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றது.

அவரின் அறிவிப்பின்படி, உள்ளூராட்சி தேர்தல் சட்டங்களைத் திருத்தித்தான் இனி அந்தத் தேர்தல் நடக்கும்.

இப்படிக் கூறித்தான் 2017 மாகாண சபை தேர்தல் சட்டங்களை ஒற்றைக் காலில் நின்று ரத்து செய்தார் அப்போதைய நல்லாட்சி அரசின் பிரதமர் இதே ரணில் விக்கிரமசிங்க. புதிய சட்டத்தை ஒரு வருடத்திற்குள் கொண்டு வருவோம் என்று நாடாளுமன்றத்திலும், அந்தத் தேர்தல் சட்டங்களை ரத்துச் செய்யும் சட்டத் திருத்தத்திலும் உறுதி அளித்தார் அவர். ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. தேர்தல் சட்டமும் வரவில்லை; மாகாண சபைகளுக்குத் தேர்தல்களும் நடக்கவில்லை.

இப்போது உள்ளூராட்சி சபைகளுக்கும் அதே கதையை விடுகின்றார். இதில் இரண்டு விடயங்கள் பொதிந்துள்ளன. ஒன்று – ஜனாதிபதி சம்பந்தப்பட்ட உருட்டுப் புரட்டு. அடுத்தது – தேர்தல் ஆணையத்தின் பொறுப்பற்ற போக்கு.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டம், தெரிவு முறைமை தொடர்பில் நாடாளுமன்றம் ஒரு தீர்மானத்துக்கு வராவிட்டால் அடுத்த ஜூலைக்குப் பின்னர் தாம் மக்களிடம் சென்று சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவார் என ஜனாதிபதி மிரட்டல் விடுத்திருக்கின்றார். சரி, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி ஜனாதிபதி என்ன சாதிக்கப் போகிறார்? மக்களின் கருத்தை அறியலாம். அதற்கு மேல் என்ன? அந்த மக்கள் கருத்து சட்டமாகிவிடாது. மக்கள் கருத்தைச் சட்டமாக்கச் சொல்லி நாடாளுமன்றத்தை யாரும் நிர்ப்பந்திக்கவும் கூட முடியாது.

'அழுதும் அவளே பிள்ளை பெற்றாக வேண்டும்' என்பது போல நாடாளுமன்றமே சட்டத்தை யாக்க முடியும். அதுவே தீர்மானம் எடுக்க வேண்டும். அப்படி சட்டதைக் கட்டாயமாக்க வேண்டும் என்று யாருமே – ஜனாதிபதியோ, நீதிமன்றமோ கூட – நாடாளுமன்றத்துக்கு உத்தரவிட முடியாது.

அப்படி இருக்கையில், சர்வஜன வாக்கெடுப்பு பூச்சாண்டி காட்டுகின்றார் ஜனாதிபதி. மாகாண சபை தேர்தல் சட்டங்களைத் திருத்துகிறோம் என்ற பெயரில் அந்தத் தேர்தல்களையே நடத்தாமல் பண்ணிய அதே திருகுதாளத்தை உள்ளூராட்சி சபை விடயத்திலும் காட்டத் தயாராகி விட்டார் ஜனாதிபதி. அதற்கு அவர் போடும் உருமறைப்பு நாடகம்தான் இந்த சர்வஜன வாக்கெடுப்புப் பூச்சாண்டி.

உள்ளூராட்சித் தேர்தலை இன்றும் அறிவித்து, தேர்தலுக்கு திகதி நிர்ணயிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. ஆனால் அதனை ஏதோ காரணம் – சாக்குப் போக்கு – சொல்லி நிரந்தரமாகத் தள்ளிப் போட முயலுகின்றார் ஜனாதிபதி. தேர்தல் பிரகடனத்தை வெளியிடாமல் காலத்தை இழுத்தடித்து, தேர்தலை நிரந்தரமாக தள்ளிப்போடும் ஜனாதிபதியின் சதித் திட்டத்திற்கு துணை போகின்றது தேர்தல் ஆணையம்.

ஜனாதிபதியின் திட்டப்படி உள்ளூராட்சி தேர்தலும் நடைபெறாமல் போனால் அந்த ஜனநாயகப் படுகொலைக்குத் துணை போன படுபாதகக் குற்றப் பொறுப்பு இந்தத் தேர்தல் ஆணையத்தின் மீதுதான் வீழும்.

தேர்தல் சட்டங்களை மாற்றுங்கள்; சீர்திருத்துங்கள்; நேர் சீராக்குங்கள்; மேம்படுத்துங்கள். யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் என்றோ நடக்கப் போகின்ற அதனை ஒரு காரணமாகக் காட்டி, இன்று நடக்க வேண்டிய தேர்தலை நடத்தாமல், ஜனநாயகப் படுகொலை செய்யாதீர்கள்!

## கௌரவமான அரசியல் தீர்வைக் கோரும் பயணத்தில் 70 ஆவதுநாள் போராட்டம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு




வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 70 ஆவது நாள் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கிளிநொச்சி மாவட்டத்தின் பூநரி பிரதேச செயலகத்துக் குட்பட்ட முழங்காவில் கிராமத்தில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் என்பதோடு '13 ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது என்ற பல கோரிக்கைகளையும் போராட்டக்காரர்கள் முன்வைத்திருந்தனர்.

இதேவேளை இந்தப் போராட்டத்தில் பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## எமது காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து மீட்க உதவுமாறு கோரிக்கை!



மன்னார் மெசிடோ நிறுவனத்தால் யாழ். பருத்தித்துறை பொலிகண்டி நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை இடம்பெற்றது.

பொலிகண்டி கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் வசிக்கும் வருமானத்தை இழந்த 75 குடும்பங்களுக்கான உலருணவுப் பொருள்கள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின்பணிப்பாளர்யாட்சன்பிராடோவால் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை அகதிகள் முகாமில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கையில் –

காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை விட்டு விலகுமாறு வற்புறுத்துவதோடு எங்களது சொந்தக் காணிகளை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்து மரக்கன்றுகளை உருவாக்கி அனுபவித்து வருகின்றார்கள்.

எனவே ஜனாதிபதி தலையிட்டு எமது காணிகளை மீட்டு எமது மீள் குடியேற்றத்துக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபா!

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணம் வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் தீபாவளி முற்பணம் வழங்குவதற்குத் தாம் அனுமதித்துள்ளதாகவும் பெருந்தோட்டத் நிறுவனங்களின் சம்மேளன ஊடகப்பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

உரிய நேரத்தில் அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா முற்பணம் கிடைக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை, ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் கீழுள்ள பெருந்தோட்டங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இம்முறை 10 ஆயிரம் ரூபா தீபாவளி முற்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் உப தலைவர் பராக்கிரம செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## நாட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டவர்களின் விவரம் வெளியிடுக

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை வெளியிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த தகவல்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுமாறு பொலிஸாருக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தத் தகவல்கள் வழங்கப்படாவிட்டால், இலங்கை பொலிஸார் மற்றும் தகவல் அதிகாரிக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாகவும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2019 முதல் நவம்பர் 2021 வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, அவர்களின் வயது, ஆண் மற்றும் பெண்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை கோரி, பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் அறியும் கோரிக்கை அனுப்பப்பட்டது.

அப்போது பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தர்ன் கல்லகே, சட்டத்தரணி கோரியுள்ள தகவல், சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் உள்ள தகவல் வகையுடன் தொடர்புடையது அல்ல என பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சட்டத்தரணி சுரேன் டி.பெரேரா தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தநிலையிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களை வெளியிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் காணிப்பிரச்சினைக்கு தீர்வைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கோரிக்கை



(ஹுஸ்பர்)

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் காணிப்பிரச்சினை என்பது மிகவும் மோசமான நிலைப்பாட்டில் உள்ளதாகவும் இன்று இந்த காணி விடயங்களால் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலக பிரிவில் தோப்பூர் உல்லைக்குளம் கிராத்தில் 576 ஏக்கர் காணியில் குறிப்பாக 96 தமிழ், 110 முஸ்லிம் விவசாயிகளும் விவசாயம் செய்வதாகவும் அதில் சிலருக்கு 1930 ஆம் ஆண்டு ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் காணி அனுமதி பத்திரமும், ஏனைய சிலருக்கு 1976 – 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ஆட்சி உறுதி வழங்கப்பட்டிருப்பதாகவும், யுத்தம் உக்கிரமடைந்த காலங்களில் அந்தப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால் முஸ்லிம்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபடாமல் இருந்தனர் எனவும், 2009 இற்குப் பிற்பாடு தமிழ் – முஸ்லிம் ஒற்றுமையாக விவசாய நடடிக்கையில் ஈடுபடும் பகுதியாக உல்லைக்குளம் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

எனினும் தற்போது அரசியல் பின்புலங்களைக் கொண்ட சிலரின் உதவியுடன் அரச காணிகளைத் தனியாருக்குப் பணத்துக்கு வழக்குகின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஒரு கூட்டம் காணிக்குப் பொறுப்பான அதிகாரிகளை இணைத்துக்கொண்டு காணிப் பிரச்சினைகளை உருவாக்குவதாகவும், அண்மையில் மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர் காணிகளை பொலிஸ், இராணுவத்தை வரவழைத்து அளவிட உத்தரவிட்டதாகவும் அத்துமீறுபவர்களைக் கைது செய்யப்படுவீர்கள் என்பதாக காணி அதிகாரிகள் தெரிவித்தனர் எனவும் குற்றம்சாட்டினார்.

மக்கள் உண்பதற்குக்கூட வழியில்லாமல் பொருளாதார சிக்கலில் இருக்கின்ற நிலையில் காணிப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதாக அரசாங்கத்தை எச்சரித்த அவர் கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் கணிப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

# தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிப்பு?

இரசாயன தட்டுப்பாடு காரணமாகத் தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் அனுர மனதுங்க இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

டொலர் பிரச்சினை காரணமாக இரசாயனப் பொருள்களை இறக்குமதி செய்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பல்வேறு பொருளாதாரப் பிரச்சனைகள் காரணமாக தொல்பொருள் ஆய்வுப் பணிகளும் தடைப்பட்டுள்ளன எனத் தொல்பொருள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தொல்லியல் திணைக்களத்தில் காகித பிரச்சினையால் பல்வேறு அறிக்கைகள் தயாரிப்பதிலும் இடையூறு ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. மேலதிக நேரக் கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக, பல்வேறு நடவடிக்கைகளுக்குப் பணியாளர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊழியர் பிரச்சினை காரணமாக ஜனாதிபதி மாளிகையில் அழிக்கப்பட்ட பொருள்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, மிக அத்தியாவசியமான நடவடிக்கைகளுக்கு மாத்திரமே டொலர்களை ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாதாம்!

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டாலும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் போதுமான அளவு சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கையிருப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கச்சா எண்ணெய் வாங்குவதற்குத் தேவையான அன்னிய செலாவணி கிடைக்காததால் சுத்திகரிப்பு நிலையம் சனிக்கிழமை முதல் மூடப்பட்டுள்ளது.



# இந்து பணிப்பாளர் உமாமகேஸ்வரனுக்கு ஆறு.திருமுருகன் தலைமையில் பாராட்டு!






யாழ்ப்பாணம், ஒக். 10

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன் உயர் பதவிக்காக விடைபெறுவதையிட்டு, வடக்கு மாகாண இந்துகலாசார பிராந்திய அலுவலகத்தில், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவருமாகிய கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

## முறைகேடுகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இரு நாடாளுமன்ற ஊழியர்கள் பணியிடை நீக்கம்

முறைகேடு தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு நாடாளுமன்ற ஊழியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்த முதல் கட்ட விசாரணை மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவிடம் வழங்கப்பட்ட அறிக்கையை அடுத்து இரண்டு ஊழியர்களும் பணியிடை நீக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இரண்டு ஊழியர்கள் தொடர்பிலும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

உணவுப் பொருள்களை வெளியே கொண்டு சென்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சந்தேகத்திற்குரிய இரு ஊழியர்களில் ஒருவர் நாடாளுமன்ற அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளர்.

மற்றைய சந்தேக நபர் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் பத்தரமுல்ல பிரதேசத்தில் வைத்து தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு சம்பவங்களும் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, நாடாளுமன்றத்துக்கு வரும்போதும், வெளியேறும் போதும் ஊழியர்களின் பயணப் பொதிகளை சோதனைக்கு உட்படுத்துமாறு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உள்ள உணவுப் பொருள்கள் வெளியே கொண்டு செல்லப்படுகின்றமை அதிகரித்துள்ளமை காரணமாக இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

சில பணியாளர்கள் உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் நாடாளுமன்றத்துக்கு வெளியே எடுத்துச் செல்வதால் அரசாங்கத்துக்கு வருடா வருடம் பெருமளவு நஷ்டம் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் தனது சேவையை ஆரம்பிக்கும் ஏரோஃப்ளோட்!


ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமான சேவை நேற்று (ஞாயிற்க்கிழமை) முதல் மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் இருந்து இந்த விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த விமான சேவைகள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, ஏரோஃப்ளோட் விமான சேவைக்கு மேலதிகமாக ரஷ்யாவின் அசூர் எயார் விமான சேவைக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு குறித்த விமானம் வாராந்தம் நான்கு தடவைகள் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
## பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இணையமும் நாமும் இணைந்து பல வருடங்களாகின்றன. எமது பல்வேறு தேவைகளுடன் இணையம் இரண்டறக்கலக்கின்றது. குறிப்பாக தொடர்பாடல், கல்வி, வணிகம் போன்றன இணையத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன. நாம் எவ்வாறு வணிக நடவடிக்கைகளுக்காக இணையத்தினை பயன்படுத்தலாம் என்பதனை இங்கு பார்க்கலாம்.

தற்போது நாம் பொருட்களை வாங்குவது அல்லது விற்பது இணையத்தினூடாக நடைபெற்று வருகின்றன. எனினும் இது பற்றிய அறிமுகமும் அறிவும் போதாமையினால் பல தொழில்முயற்சியாளர்கள் தங்கள் பொருட்களை விற்க வாங்க வழி தெரியாது திணறுவதையும் எம்மால் பார்க்க முடிகிறது. ஈ – காமர்ஸ் (E-Commerce), என்பது வாங்குதல் மற்றும் விற்பதில் ஒரு புரட்சிகரமான படியாகும். இது மின்னணு வர்த்தகம் (E-Commerce), மின்வணிகம் அல்லது இணைய வர்த்தகம் என்றும் அழைக்கப்படும். மின் வணிகம் என்பது இணையத்தைப் பயன்படுத்தி பொருள்களை அல்லது சேவைகளை வாங்குவது, விற்பது மற்றும் இந்த பரிவர்த்தனைகளைச் செயல்படுத்த பணம் மற்றும் தரவை மாற்றுவதைக் குறிக்கிறது. இது இலங்கையில் வளர்ந்து வரும் ஒரு இணைய வணிகமாகும்.

மின்வணிக நிறுவனங்கள் இலங்கையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மில்லியன் கணக்கான உலகளாவிய தயாரிப்புகளுக்கான ஏற்பாடுகளை வழங்குகின்றன. இன்று வாடிக்கையாளர்கள் ஆன்லைனில் பொருட்களை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு விரும்பும் பல காரணங்களில், இலகுத்தன்மை, விலை ஒப்பீடுகள், கடைகளில் கூட்டம் இல்லை, உடல் பயணம் தேவை இல்லை, மற்றும் நம் அன்புக்குரியவர்களுக்கு மிக எளிதாக பரிசுகளை அனுப்புதல் ஆகியவை அடங்கும். எனவே இவ்வாறான மின்வணிக நடவடிக்கைகள் எங்கு நடைபெறுகின்றன எனவும் பயன்படுத்துவதற்குரிய மின்வணிக வலைத்தளங்களைப் பற்றியும் நாம் அறிந்திருப்பது எமக்கு அத்தியாவசியமாகிறது எனவே, இன்று இலங்கையின் பெருமளவில் பேசப்படுகின்ற இணையத்தளங்களை பற்றி தெரிந்து கொள்வோம்.



### கப்ருகா - Kapruka

கப்ருகா என்பது இலங்கையில் உள்ளூரில் சொந்தமான முதல் மற்றும் பெரிய ஈ – காமர்ஸ் நிறுவனமாகும். இலங்கையர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த சேவையை வழங்குவதற்காக 2003 இல் இது நிறுவப்பட்டது. கப்ருகா ஒன்லைன் இணையத்தளம் இலங்கை மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு தனது இணையத்தளத்தின் ஊடாக பொருட்களை ஆன்லைனில் கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கிறது. Kapruka Productions (Pvt) Limited என்ற பெயரில், நிறுவனம் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டு அதன் சொந்த லேபிள் தயாரிப்புகளான கப்ருகா கேக்குகள், பூக்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகளை வழங்குகிறது. கப்ருகா வாடிக்கையாளர்களுக்கு சந்தை அல்லாத அணுகுமுறை மற்றும் சிறந்த ஆன்லைன் கொள்முதல் அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

1.1 மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு இலங்கை வாடிக்கையாளர்கள். பெரும்பாலும் அமெரிக்காவில், மக்கள் இலங்கையில் உள்ள தங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தினசரி பரிசுகளை அனுப்ப கப்ருகாவைப் பயன்படுத்துகின்றனர். மேலும், குழுவானது நன்கு அறியப்பட்ட இலங்கை வர்த்தக நாமங்களுக்கான உத்தியோகபூர்வ மின் விநியோகஸ்தராக அல்லது இ – வணிக வியாபாரியாக மாறியுள்ளது. அவற்றில் சில தில்மா, அக்பர், லிங்க் சமாஹான் மற்றும் அமேசான், ஈபே, எட்ஸி மற்றும் வால்மார்ட் உள்ளிட்ட உலகளாவிய ஈ – காமர்ஸ் தளங்களில் உள்ளன. புலம்பெயர்ந்த இலங்கை மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதன் மூலம் கப்ருகா டாலர் வருமானத்தை ஈட்டுகிறது.

### தராஸ் Daraz

Daraz தென்ஆசியாவின் மத்தியில் பிரபலமான E – காமர்ஸ் இணையதளம். இது ஒரு ஆன்லைன் ஈ – காமர்ஸ் ஸ்டோர் ஆகும், அங்கு நீங்கள் ஆடை, காலணிகள், ஆடைகள், நகைகள், பாகங்கள் மற்றும் பலவற்றைக் கொண்டிருக்கலாம். இது 2012 இல் தொடங்கியது. அலிபாபா குழுமம் தற்போது அதன் உரிமையை எடுத்து வருகிறது.

னுயசயண தெற்காசியாவின் முன்னணி மெய்நிகர் சந்தையாகும். பாக்கிஸ்தான், பங்களாதே;, இலங்கை, மியான்மர் மற்றும் நேபாளத்தில்; முதன்மையான ஆன்லைன் சில்லறை சந்தையாக உள்ளது. இது சுமார் 30,000 விற்பனையாளர்களையும் 5 மில்லியன் வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளது. தற்போது 2.5 மில்லியனுக்கும் அதிகமான தயாரிப்புகளைக் கொண்டுள்ளது. நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ், வீட்டுப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உணவு ஆகியவை Daraz இல் கிடைக் கும் சில வகைகளாகும்.

அதன் இணையதளம் மற்றும் ஆப்ஸில் (App) 10010 வகைகளில் 20 மில்லியனுக்கும் அதிகமான தயாரிப்புகள் உள்ளன. னுயசயண என்பது உருது வார்த்தையாகும், அதாவது "Drawer" என்று பொருள்படும். இந்த பெயரின் முக்கிய காரணம் என்னவென்றால், Drawer யின் நாம் அனைத்தையும் காணலாம். இது போன்று இங்கும் நாம் அனைத்தையும் காணலாம். தொழில்நுட்பத்தின் இந்த முன்னணி யுகத்தில், பல்லாயிரக்கணக்கான விற்பனையாளர்களை மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுடன் இணைக்க உதவுவதும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதும் ÐBÄBð இன் நோக்கமாகும்.

### இக்மேன் Ikman

இக்மேன் (Ikman) ஒரு தளமாகும், அதில் நீங்கள் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் வாங்கலாம் மற்றும் விற்கலாம். உங்களுக்கு நெருக்கமான ஒப்பந்தங்களைக் கண்டறிய இருப்பிடத் தேர்வியைப் பயன்படுத்தலாம். இது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைக்கிறது. இக்மேன் இலங்கை முழுவதிலும் மற்றும் 50 க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகைகளில் பரந்த அளவிலான பொருள்களைக் கொண்டுள்ளது. நீங்கள் கார், மொபைல் ஃபோன், வீடு, கணினி அல்லது செல்லப்பிராணியைத் தேடினாலும், இக்மேன் இல் சிறந்த ஒப்பந்தத்தைக் காண்பீர்கள். சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தேடு பொறிகள் இதனை இலகுவாக்குகின்றன. மூன்று மாத செயற்பாட்டின் பின்னர் இலங்கையில் அதிகம் பார்வையிடப்பட்ட இணையத்தளங்களில் 6வது இடத்தினை இக்மேன் பெற்றுள்ளது.

(தொடரும்...)



# தெற்காசியாவின் வைத்தியத்தின் தந்தை வைத்தியகலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன்!

மேலைத்தேய மருத்துவத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து சாதனையாக்கி மருத்துவப் புட்சியை ஏற்படுத்தியவர் வைத்திய கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன். அவரது பிறந்ததினம் இன்றாகும். ஆதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.



தெற்காசியாவின் அதிசயமாகவும், மருத்துவ புரட்சியை ஏற்புடையதாக மாற்றியமைத்து மாபெரும் வெற்றிகண்டவர் அமெரிக்க தேசத்தின் புதல்வன் தெற்காசியாவின் மருத்துவத்தின் தந்தை வைத்திய கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன்.

இவரது பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும், இறப்பு சரித்திரமாக பட்டிதொட்டி எல்லாம் பறைசாற்றப் பட்டுள்ளது. அதற்கு வைத்தியர் கிறீனின் எண்ணங்களில் உருவான வண்ணம் கொண்ட சிந்தனையும் விடா முயற்சியும் கடின உழைப்புமே ஆகும்.

### வாழ்க்கைப்படி நிலை

சாமுவேல் பிஸ்க் கிறீன் அமெரிக்கா தேசத்தில் 1822 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி திரு.வில்லியம்ஸ் ஜி..கிறீன் யூலியா தம்பதிகளுக்கு எட்டாவது பிள்ளையாக அவதரித்தார். கிறீன் அவர்கள் 1841 ஆம் ஆண்டு அமெரிக்கா தேசத்தின் நியூயோர்க் நகரத்தில் உள்ள மருத்துவக் கல்லூரியில் தனது 19 ஆவது வயதில் மருத்துவக் கற்கையை ஆரம்பித்து, 1845 ஆம் ஆண்டு கற்கை நெறியை நிறைவு செய்து மருத்துவராக வெளியேறினார்.

மருத்துவத் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தனது சிந்தனையை சிதறவிட்டார். உஷிதமான காரியங்களை உறக்கமின்றி செயற்படுத்தினார். நியூயோர்க் நகர வாழ்க்கை வசதி மிக்கதாக அமைந்தாலும் அவரது உள்ளக்கிடக்கையில் ஊறிப்போன நினைவுகள் ஊக்கமளித்து உந்துதலை ஏற்படுத்தின. நான் என்னுடைய மகோன்னதமான தொழிலை பயனுள்ளதாக மற்றவர்களுக்கு பயன்படக் கூடியவகையில் தேவையுள்ள மக்கள் வாழும் இடங்களுக்கு ஏன் போகக் கூடாது?

அறியாமை என்னும் இருளுக்குள் மூழ்கிக்கிடக்கும் மக்களை ஏன் ஒளியேற்றி அறியாமை இருளை அகற்ற முடியாது என்ற கேள்விகளின் நிமிர்த்தம் தன்னை நிலைநிறுத்தி நிறுத்திட்டமாக யாழ்ப்பாணத்தை தெரிவு செய்து மக்களுக்கு சுகமளிக்கும் பணியைச் செய்வேன் என அறுதியும், இறுதியும், உறுதியுமாக ஆண்டவரின் ஏவுதலால் பணிக்கப்பட்டார்.

அதன் நிமிர்த்தம் 1847 ஆம் ஆண்டு பருத்தித்துறையை வந்தடைந்த கிறீன், வல்வெட்டித்துறையில் உள்ள ஊரிக்காடு என்னும் இடத்தில் அமெரிக்கன் சிலோன் மினரிகளின் குடும்பத்தில் வரவேற்கப்பட்டு இணைத்துக் கொள்ளப்பட்டார்.

பின்னர் அவர் அமெரிக்கன் மினரிமாரின் வழிப்படுத்தலுடன் அவர்களின் கூடாரமான தெல்லிப்பழையில்மையம்கொண்டுபிறப்பின்ஆழம்உணர்ந்து ஆண்டவரின் துணையுடன் வட்டுக்கோட்டையில் பற்றிக் கோட்டா செமினறியில் தனது பணியை ஆரம்பித்து அதில்திருப்தியற்ற நிலையில் மானிப்பாய் நோக்கி தன்னுடைய நகர்வை மேற்கொண்டு அதில் முழுமையும், திருப்தியும் காண்கிறார் சாமுவேல் பிஸ்க் கிறீன்.

### மேலைத்தேய மருத்துவத்தின் வளர்ச்சி

தெற்காசியாவின் மருத்துவத்துக்கு வித்திட்ட வைத்திய கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன், இலங்கையிலே தனது தடத்தைத் தளர்வின்றித் தனித்துவமாகத் தன்னிறைவுகாணச் செய்தவர். இலங்கையிலே மருத்துவம் என்பது கை வைத்தியம், பரியாரியார், மாந்திரீகம் போன்ற முறைகளைக் கைக்கொண்டு பின்பற்றப்பட்டு பரம்பரை பரம்பரையாக நடத்தி வந்தனர். அதற்கு முற்றுப்புள்ளி வைத்து மேலைத்தேய மருத்துவத்தை அறிமுகப்படுத்தினார் கிறீன்.

வைத்தியர் கிறீன் அவர்கள் மருத்துவத்தை மட்டுமல்லாது மருத்துவக் கல்லூரி, தாதியர் கல்லூரி என்பவற்றை முதல் முதலில் நிறுவி மருத்துவத்தின் நிறுவுநர் என்பதை நிலைநாட்டி மருத்துவத்தை பாரிய அளவில் எழுச்சி கொள்வதற்கு அடித்தளமிட்டார்.

மருத்துவம் என்பது உயிர்காக்கும் ஓர் உயிர் பொறிமுறை விஞ்ஞானமாகும். விந்தைமிக்க உலகில் விசித்திரமான சிந்தனைகளை வியக்கத்தக்க வகையில் முடியுமா, முடியாதா என்ற நம்பிக்கையுடன் ஆண்டவரின் வழிப்படுத்தலுடன் மருத்துவத்தை மானிப்பாய் என்னும் மண்ணில் மையம் கொள்ள வைத்தவர் மங்கா புகழ் பெற்ற வைத்திய கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அமெரிக்க மினரிகளினாலும் தமக்கு பாதிப்பு ஏற்படலாம் என எண்ணங் கொண்டு அவர்களுடன் பழகுவதையோ, உறவுகொள்வதையோ தவிர்த்து வந்தனர். இருந்த போதும் ஆண்டவரின் ஏவுதலால் மக்கள் மனங்களில் படிப்படியாக இழையோடத் தொடங்கி அது ஆழ ஊடுருவி அற்புதங்களை நிகழ்த்தத் தலைப்பட்;டன.

அந்தவகையில் நோக்கும் போது ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வைத்திய கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன், தமிழ் மொழியைத் தாய்மொழியாக கொண்ட மக்களுக்கு எவ்வாறு கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியும் என்ற கேள்வி எழலாம்.

அந்தக் கேள்வியை நிலைக்கவிடாது நிபந்தனையற்ற விதத்தில் வைத்தியர் கிறீன் வாஞ்சையுடனும், மன வைராக்கியத்துடனும் தமிழைக் கற்றுப் பாண்டித்தியம் அடைந்தார். அதன் மூலம் தமிழை சாதாரண தமிழ் மக்கள் பேசுகின்றமை போல் அல்லாவிட்டாலும் மக்கள் புரிந்து செயலாற்றக் கூடிய வகையில் பேசி ஆங்கில மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி வடிவம் ஆக்கி கற்றல் செயற்பாட்டை இலகுபடுத்தியமையுடன், சிறந்த தமிழ் மருத்துவர்களின் எழுச்சிக்கு வித்திட்டார்.

இந்த மானிப்பாய் மருத்துவக் கல்லூரியின் ஆரம்பம் என்பது வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். தமிழ் மக்கள் தமது சொந்த மொழியிலேயே மேற்கத்தைய விஞ்ஞானத்தை அறிந்து கொள்ளக்கூடிய ஓர் அரிய வரப்பிரசாதமாக இந்த மருத்துவக் கற்கை நெறி அமைந்திருந்தது. இது வைத்திய கலாநிதி கிறீன் அவர்களுடைய மெய்யியல் சிந்தனையின் ஒரு பகுதியாகக் காணப்பட்டது,

அதுமட்டுமல்லாது தமிழ் மருத்துவர்கள் தாம் செய்ய நினைப்பதைத் தமிழிலேயே சிந்திக்க வேண்டுமென்பதையும், செயற்படுத்த வேண்டுமென்பதையும், உலகத்திலேயே முதல் தோன்றிய மூத்த குடிகளான தமிழர்கள் தமது பெறுமதி மிகக் கலாசாரத்தைப் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்பதுடன் அது தங்களால் கழங்கப்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்.

இதனால் தமிழ் மக்களுக்கு வைத்தியர் கிறீன் மீது அளவுகடந்த அன்பும் அளவுக்கு மீறிய நம்பிக்கையும் ஊனினை கடந்த உறவுநிலையும் பிரபாகிக்கத் தொடங்கியது. வைத்தியர் கிறீன் மாசற்ற மருத்துவத்தை மானிப்பாய் பகுதியில் சங்கமிக்க செய்து அதனை ஏனைய பகுதிகளுக்கும் வியாபிக்கச் செய்தார். அதில் ஒன்று இன்று யாழ் நகரில் தலை நிமிர்ந்து நிற்கும் தன்னிகரில்லா பொது வைத்தியசாலை. இதன் அடித்தளம் அல்லது ஆரம்பம் செய்யப்பட்ட இடத்தில் இந்து ஆலயம் பரிபாலனம் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியர் கிறீனால் விதைக்கப்பட்ட மேலைத்தேய மருத்துவம் என்ற விதை இன்று விருட்சமாக அகன்று விரிந்து வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. இது இருநூறு ஆண்டுகளைத் தொடும் காலத்திலும் மக்கள் மனதில் அகலாத நினைவாக அசைபோடுகின்றது.

இதில் நாம் நினைவு கொள்ள வேண்டிய விடயம் இலங்கையிலே தமிழர் பிரதேசங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் நாகரீகத்தாலும், பண்பாட்டாலும் இறுகக்கட்டுண்டு இருந்த காலப்பகுதி மட்டுமல்லாது, மதத் தாலும், சாதியத்தாலும் பிணையப்பட்டு கலப்பற்ற காலப்பகுதியாக இருந்தது.

இப்படியான சூழலில் மொழி தெரியாது, இடம் தெரியாது, உறவுகள் இல்லாத ஊரில் தனித்து இருந்து செயற்படத் துணிந்த வைத்திய கலா நிதி சாமுவேல் பிஸ்க் கிறீன் தனது இலட்சியத்தில் இடர்களைக் கண்ட போதும், இம்மியளவு கூட அதில் இருந்து பின்வாங்காது மேலைத்தேய மருத்துவத்தை மக்கள் மயப்படுத்திய பெருந்தகை.

வைத்தியர் கிறீன் அவர்களின் கற்பித்தல் முறை நுணுக்கமானதும், நூதனமானதாகவும் காணப்பட்டது. அதாவது ஒரு நோயாளி என்பதை அறிந்து கொண்டால் அல்லது அவரை குணமாக்குவதற்கு அழைக்கப்பட்டால் உடனடியாக செயலாற்ற வேண்டும் என்பது அவரின் கண்டிப்புடன் கூடிய கட்டளையாகும்.

அதைவிடுத்து குதிரை வண்டி வந்த பின்பு போகலாம் என்று காத்திருக்க வேண்டாம், பணம் தருவார்கள் என்று ஆசைப்பட வேண்டாம், சாதாரணமான உங்கள் உடையுடன் நடந்தே செல்லுங்கள், இவ்வாறு தான் வைத்தியர் கிறீன் தன்னுடைய மருத்துவர்களை உருவாக்கினார்.

வைத்தியர் கிறீன் எளிமையாக வாழும் முறைகளை அதிகம் கற்றுக் கொடுத்தார். கால்களால் நடந்து செல்லுங்கள், பாரம்பரியமான உடைகளை அணிந்து கொள்ளுங்கள், இவ்வாறு இருக்க வேண்டுமென்பதே எனது கனவு எனக் கூறுவார்.

இவ்வாறு மருத்துவத்தை வளர்த்தது மட்டுமல்லாது, தமிழர்களின் மனங்களில் வைத்தியர் கிறீனின் நினைவுகள் வளர்ந்தது அதிகம் என்பது கண்கூடே. இப்படிப்பட்ட நற்செயல்களை நன்றே செயற்படுத்தி தனது கனவை நனவாக்கி வெற்றி கண்டார்.

இதன்மூலம் தெற்காசியாவில் மருத்துவத்தை அறிமுகம் செய்து வளர்த்தமை மட்டுமல்லாது, இலங்கையிலே மருத்துவப் புரட்சியை ஏற்படுத்தி மருத்துவ சாலைகள், மருத்துவர்கள், தாதிகள் என்பவர்களை உருவாக்குவதற்குரிய சரியான வழிமுறைகளைப் பின்பற்றியதால் இன்றும் மருத்துவத்துறை வளர்ச்சி கண்டு எழுச்சி கொண்டுள்ளது.

இதனால் வைத்தியர் சாமுவேல் பிஸ்க் கிறீன் தெற்காசியாவின் அதிசயமாகவும், மருத்துவத்தின் தந்தை எனவும் வர்ணிப்பதில் மிகையேதுமில்லை.

**பழனித்துரை தர்மகுமாரன், ஆசிரியர்,**
**உடுவில் மகளிர் கல்லூரி**

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 145

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தேவ நம்பிய தீசன் தமிழனா? ராஜராஜ சோழன் இந்துவா?

பல வாசகர்கள் நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தைகளை இவ்வளவு விரிவாக ஏன் எழுதுகிறேன், நடந்து முடிந்தவைதானே, பிரயோசனங்கள் எவையும் யதார்த்தமாகத் தமிழ் மக்களுக்குக் கிட்டவில்லை, யாவரும் ஏமாந்தமையும், ஏமாற்றியமையும்தான் நடந்தன என்ற அங்கலாய்ப்புகளைத் தெரிவித்தார்கள்.

மேலும் பலர் தாங்கள் அப்பொழுதோ, போரின் பின்னரும் கூட, அறிந்து கொள்ளாத பல பின்புல செய்திகள் இருக்கின்றன, அன்று இவை நேரிடையாகவே தமிழ் மக்களுடன் பொது வெளியில் பகிரப்பட்டு இருந்தால் 'முள்ளிவாய்க்கால்' தவிர்க்கப்பட்டு இருக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டு முடிந்தவரை அவற்றை மக்கள் புரிந்து கொள்ள எழுதுங்கள் எனக் கேட்டார்கள்.

சில இயக்கத் தரப்புகளிடம் இருந்து பக்கச்சார்பான கருத்துக்களும் இடையில் வந்தன.

ஆனாலும் நான் ஆரம்பத்திலேயே தெரிவித்தமை போல, பக்கச் சார்பின்றி, இவற்றைத் தமிழ் மக்களின் நிலையிலிருந்துதான் பதிவிடுகிறேன்.

எனது அறிவுக்கு எட்டிய அளவில், அனுபவத்தில், தமிழர்களது நிகழ்கால அரசியல் கோரிக்கைகளும் விளைவுகளும் தாக்கங்களும் ஆவணமாக இரண்டு விசாரணைகளில்தான் பதியப்பட்டுள்ளன.

ஒன்று – சன்சோனி ஆணைக்குழுவின் விசாரணைகள்.

இது, 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னர் நடந்த தேர்தலைத் தொடர்ந்த வன்முறைகளால், ஓரளவுக்கு தமிழ் மக்களுக்கு எவ்விதமான தீர்வு சாத்தியமாகலாம் என்பதை அணுக ஆணைக்குழுவிற்கு ஆணைகள் இருந்தாலும், நடத்தப்பட்ட சிங்கள பேரினவாதிகளின் கூத்துக்களாலும், அவற்றுக்கு அனுசரணை தந்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளினாலும் முடிவில் சன்சோனி, தமிழீழம் கேட்டதில் எதிர்வினையே 1977 ஆம் ஆண்டு கலவரங்களின் தூண்டுகோல்கள் என முடித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமது தீர்மானத்தின் நிலைப்பாட்டில் தமிழீழக் கோரிக்கையை கைவிடாது, யதார்த்தமான தீர்வுகள் பற்றி சாட்சியங்கள் அளித்தாலும், தமிழ் மக்கள் பலரும், அவர்களுக்காக சாட்சியங்களை நெறிமுறைப் படுத்திய பக்கம் சாரா நிறுவனங்கள் சமர்ப்பித்த அணுகுமுறைகளை கூட்டணித் தலைவர்களோ மற்ற கட்சிகளோ எதிர்க்கவில்லை. நியாயமான தீர்வு என்பதில் அங்கு புரிந்துணர்வு இருந்தது. சமர்ப்பணங்களில் தமிழ் மக்கள் எப்பொழுதுமே பிரிவினையை எதிர்த்துள்ளார்கள், சமஷ்டி அடிப்படையையே கோரினார்கள், அதுவே தகுந்த அடிப்படை எனக் கூறப்பட்டது. இது 1979 ஆண்டு காலங்கள்.

சன்சோனி ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களும் சாட்சியங்களும் 1983 இல் நடந்த பயங்கரமான கலவரங்களுக்கு வித்திட்டன. சன்சோனி ஆணைக்குழுவிலேயே பல பின்புல செயற்பாடுகள் முன்வைக்கப்பட்ட ஆவணங்களுக்கும் சாட்சியங்களுக்காகவும் நடைபெற்றன. இந்தப் பின்புலங்கள் எல்லாமே பதியப்பட்டனவாக நான் கருதவில்லை.

நேரடியாக இந்த ஆணைக் குழுவுடன் ஈடுபட்ட சட்டத்தரணிகளில் நானும், சந்திரகாசனும்தான் இன்று உள்ளோம் என எண்ணுகிறேன். எனதும், சந்திரகாசன், மணிவாசகம் அண்டவூட், லெஸ்ரி பாட்லெட், சிவா ராஜரத்தினம் போன்றவர்களினதும் கைவசம் இருந்த ஆவணங்கள், நகல் ஆவணங்கள் எல்லாம் கலவரங்களில் எரிக்கப்பட்டன. சிவாராஜரத்தினத்திடம் இருந்தவற்றில் விசாரணைகளின் பெரும் பகுதி திருகோணமலையில் சம்பவங்களை நெறிப்படுத்தியவை. அவற்றில் 'திருக்கோணேஸ்வரமும்' அடங்கும்.

இவற்றை சேமித்துப் பாதுகாக்க கட்டமைப்புகள் அப்போது தோன்றவும் இல்லை. பின் லண்டனில் இயங்கிய தமிழர் தகவல் நிலையம் சேமித்த ஆவணங்கள் யாவும், ஒப்பந்தம் ஏற்பட்ட பின் தமிழ்நாட்டுக்குப் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்ட போது இந்திய, தமிழ்நாட்டு உளவு பிரிவினரால் அனுமதி மறுக்கப்பட்டு, அவை சூறையாடப்பட்டன.

இந்தப் பின்புலங்கள் பதிவுகளுக்காக நமது காலங்களில் கிடைக்குமோ தெரியாது.

இப்பொழுது நான் எழுதிப் பதிவானவையே 'காலைக்கதிர்' வித்தியாதரனி பெருமளவு உதவியினால்தான்.

அடுத்து – இந்திய ஒப்பந்த ஆக்கங்களுக்கு முன்னர் புதுடெல்லியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களால் தமிழ் மக்கள் எதிர்கொண்டவை, எதிர்கொள்ளக் கூடியவை பற்றி தந்த சமர்ப்பணங்கள். இவை ஒரு விசாரணையின் அடிப்படையில் நடந்தவை அல்ல. உதவிகள் தருவதற்காகப் பரிந்துரைகளுக்காகத் தரப்பட்டவை.

அவற்றை அடுத்து, இந்திய ஒப்பந்தம், பிரேமதாஸாவின் பேச்சு வார்த்தைகள், சந்திரிகாவின் தீர்வு திட்டம் என்பன நடந்தவைக்காக ஆராயப்பட்டு நோர்வே சமாதான பேச்சு வார்த்தைகளில் தமிழ் மக்களின் அனுபவித்தவை, எதிர்நோக்குபவை என விரிவான சமர்ப்பணங்களால் ஆராயப்பட்டுள்ளன.

சமாதான பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாளர்கள் பெற்றுக் கொண்ட ஆவணங்கள் கட்சித் தலைவர்களுடனும் சர்வதேச தலைவர்களுடனும் ஈடுபட்ட சந்திப்புகளின் பதிவுகள், பேச்சுவார்த்தைகளில் எல்லாம் பதியப்பட்டு, தொகுக்கப்பட்டு ஆவணங்களாக நோர்வேயால் பதியப்பட்டமை மட்டுமல்லாமல், அதன் பலாபலன்களையும் தங்களது அனுபவங்களையும் கூட உள்நோக்கிய ஆராய்வுகளுடன் பதிந்து, பாதுகாத்து உள்ளார்கள். அவற்றில் கடந்த பின்புலங்கள், தமிழ் பகுதிகளின் அணுகுமுறைகள், அவற்றின் தாக்கங்கள் என்பவை பற்றி அறிந்து கொள்ளப் பகிர்ந்தேன்.

அதேசமயம் தமிழ் மக்கள் எதிர்கொள்பவை, அவர்கள் தங்களது சிந்தனையில் பதித்து அரசியலுக்காக அல்லாது தங்களது விமோசனங்களுக்கு நடைமுறைப் படுத்தத் தேவையானவை என கருதுபவற்றை எடுத்துக்காட்டவும் இந்த விரிவான பதிவுகள் உதவும் என்று கருதினேன்.

அதேசமயம் சில வாசகர்கள் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது கட்டுரையில் தேவ நம்பிய தீசன் உண்மையில் தமிழன் என்றும், அவனது காலங்களில் தமிழர்கள் பலர் பௌத்த மதத்தைப் பின்பற்றினார்கள் என்பதால் தமிழ்ப் பிரதேசங்களில் காணப்படும் பௌத்த சின்னங்கள் நிச்சயமாக சிங்கள மக்களது அல்ல, இவை பொதுவான அந்தக் காலத்து பௌத்த சின்னங்கள் என அடையாளப்படுத்தாது தொல்பொருள் திணைக்களத்தினால் திரிவு படுத்தப்படுகின்றன என்ற கருத்தையும் தெரிவித்து, அவற்றின் சமரச நிலைப்பாடு பற்றியும் ஆதங்கங்கள் எழுப்பப்பட்டன.

இதிகாசங்களும், புராணக் கதைகளும் சமூகங்களின் அடையாளங்களுக்கு உதவுமே அல்லாது முற்றும் முழுதாக அவற்றை சரித்திரத்துக்கான ஆதாரங்களாகக் கொள்ள முடியாது. இராவணனை சிவ பக்தனாகவும், தென்பகுதியை ஆண்டவனாகவும், தமிழ் மக்கள் கருதுகிறார்கள். இப்பொழுது சிங்கள பேரினவாதத் தரப்பிலிருந்து இராவணன் என ஒரு மன்னன் இருந்ததில்லை எனவும், அப்படி இருந்திருந்தால் அவன் சிங்களவர்களின் மன்னன் என்றும் ஆக்கங்களைப் பார்க்கிறோம். ஆக இப்படியான புராண, இதிகாச, ஓரளவு சரித்திர ஆதாரங்களால் இலங்கைத் தீவின் பூர்வ குடிமக்கள் தமிழர்கள்தான் என நிரூபிக்கப்பட்டாலும், சமகால அரசியலில் அவை சரித்திரமாகுமேயொழிய சிங்கள மக்கள் முழு தீவுக்கும் தாங்கள் கொண்டிருக்கும் இறைமையில் இருக்கும் உரிமைகளை மாற்றி விடப் போவதில்லை. ஆகவே இந்த நிலைமைகளில் இருக்கும் அதிகார பேரினவாதத்துடன் தான் தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கௌதம புத்தரின் போதனைகளை பின்பற்றி, அவரது பஞ்சசீலங்களை முன்னிலைப்படுத்தும் சிங்கள பெரும்பான்மையினர் எப்படி இப்படியான கொடூரமான வன்முறைகளுக்கு அடிமையானார்கள், அதேபோல தமிழ் மக்கள் எப்படி வன்முறை வாதிகளானார்கள், கிருஷாந்தி போன்று தமிழ்ப் பெண்களை மட்டுமல்ல, அழகு ராணி மானம்பெரி என்ற அவர்களது இளம் பெண்ணையும், அதேபோல தங்களது இனத்தின் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களையும், சமரில் அல்ல, தேடிப் பிடித்துக் கைது செய்தவுடன் சாகடித்துத் தூக்கு கம்பங்களிலும், ஆறுகளிலும், நீர் நிலைகளிலும் எறிந்தமை எப்படி, இவை அவர்களுடனேயே வளர்ந்த மன நோயா என்ற அங்கலாய்ப்பிலும் அளவளாவினார்கள்.

நான் சரித்திர ஆராய்வாளனோ அன்றில் மனோதத்துவ ஆராய்வாளனோ அல்லன்.

எனினும் இவை பற்றி வாசித்த பின்னணிகள் உண்டு.

கல்கி தனது நீண்ட தொடரில் 'பொன்னியின் செல்வன்' எழுதிய போது அங்கு மதம் அடிப்படையாகவில்லை. அது சினிமா படமாக தற்பொழுது வெளியான போது மாமன்னன் ராஜராஜ சோழன் இந்துவா, அவன் சைவைத்தைதான் பின்பற்றினான், ஆனால் தமிழ் மன்னனின் வரலாறு திரிவுபடுத்தப்படுகின்றது என்றெல்லாம் சர்ச்சை. யதார்த்தத்தில் அவன் மீண்டு வந்து, ஈழத்து சைவக் கோயில்கள் எல்லாவற்றிற்கும் புத்துயிர் தருவானா? ஆகவே சர்ச்சைகளைத் தவிர்த்து யதார்த்தங்களில் முன்னேற வேண்டும். தமிழ் மக்கள் அந்த அணுகுமுறையைக் கையாளவில்லை.

மிகக் குறுகிய கால ஓட்டத்தில் பார்த்தால், சமஷ்டி கோரி, பின்னர் இறைமையை மீட்பது என தீர்மானம் நிறைவேற்றி, தனி நாடு கேட்டு, சமஷ்டிக்குச் சற்று குறைவானதை தந்த ஒப்பந்தத்தை நிராகரித்து, சந்திரிகாவின் தீர்வு திட்டத்தை மறுத்து, நோர்வேப் பேச்சுகளில் ஒஸ்லோ தீர்மானமாக சமஷ்டி அடிப்படையில் தீர்வினை ஆராயலாம் என இணக்கம் அளித்து, பின் பிரிவினையின் முதற்படியாக காணப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை சந்தித்து, அதை மறுத்து, மஹிந்த போரை நடத்தி வெற்றியீட்டிய பின் பேரினவாதம் ஒன்றுமே தராது போக, பின் தனி நாட்டு கோரிக்கையைக் கைவிட்டு, சமஷ்டிதான் மக்களின் ஆணை என அரசியல் செய்தாலும், புதிய சிந்தனையில் இருந்த சிங்கள மக்களின் அரகலய போராட்டம் அன்றில், காலி முகத்திடல் புரட்சி தமிழ் மக்களுக்காக எனப் பேசியது என்ன? அல்லது நோர்வேப் பேச்சு வார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டவற்றின் அடிப்படையில் இருந்தாவது ஏதாவது எழுந்தனவா? இல்லை. இது தான் இன்றும் யதார்த்தம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். இந்துக்கல்லூரி கொழும்பு பழையமாணவர் சங்கத்தின் விஜயதசமி விழாவும், மகத்தான விருது வழங்கல் நிகழ்வும்!







யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் விஜயதசமி விழாவும், மகத்தான விருது வழங்கல் நிகழ்வும் கொழும்பில் நடைபெற்றது.

இந்த விழாவில் வைத்திய கலாநிதி மகேசன் குருபரன் (இதய சிகிச்சை) அவர்களுக்கும், பழைய மாணவர் சங்கத்தின் மூலம், தொடர்ச்சியாக 45 வருடங்கள் கல்லூரியின் பயணத்தில் பங்களித்த தம்பிமுத்து சச்சிதானந்தன் அவர்களுக்கும் 'மகத்தான விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஒரு படைப்பாளியின் புகழுக்குக் காரணம் அவன் படைப்புகளே. அந்தப் படைப்புகள் அவன் புகழை எட்டுத்திக்கும் எடுத்துச்செல்லும். இது போல்தான் இந்து அன்னையின் வானளாவிய புகழுக்குக் காரணம் அவள் பெயர்சொல்லும் பிள்ளைகள். அப்படி இந்து அன்னை பெருமை கொள்ளும் இந்துவின் மைந்தருள் ஒருவர்தான் வைத்திய கலாநிதி மகேசன் குருபரன் அவர்கள்.

1980 இலிருந்து 1987 வரை யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி கற்று உயர்தர விஞ்ஞானப் பிரிவில் அதி திறமைச்சித்தியில் சித்தியடைந்து கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவானார். பின்னர் வைத்திய முதுகலைமாணி பட்டமேற்படிப்பில் சிறப்பாக செயற்பட்டு மருத்துவத்தில் ஒட்டுமொத்த சிறந்த செயற்பாட்டுக்கான வைத்தியர் ஜோன் எஃப் ஸ்டோக்ஸ் தங்கப்பதக்கத்தை இவர் பெற்ற போது இந்து அன்னை மணிமகுடத்தில் மற்றுமொரு முத்து சேர்ந்துகொண்டது என்றால் மிகையாகாது.

பட்ட மேற்படிப்பு பயிற்சியை இலங்கை தேசிய வைத்தியசாலை இதய சிகிச்சைப் பிரிவிலும் தொடர்ந்து இங்கிலாந்தின் லீட்ஸ் தேசிய வைத்தியசாலையிலும் மேற்கொண்டு நாடு திரும்பி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இதய சிகிச்சை நிபுணராக நியமனம் பெற்றார்.

அன்றிலிருந்து பத்து வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் வடபுலத்தில் இதய சிகிச்சை சேவைகளை மேம்படுத்துவதற்காக அயராது உழைத்து வருகிறார். இவர் நோயாளிகள் மீது கொண்ட பரிவும் தன் துறைமீது கொண்ட அர்ப்பணிப்பும் அளவிட முடியாதவை.

எந்த நாட்டுக்கும் குடிபெயரக்கூடிய தகைமையுள்ள இவர் போன்றவர்கள் இன்னமும் இந்த நாட்டு மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்து பணியாற்றுவது இவர்கள் இந்த மண்ணின்மீதும் மக்கள் மீதும் கொண்ட பற்றைக் காட்டுகிறது. இவரது முப்பதிற்கும் மேற்பட்ட வெளியீடுகள் மருத்துவ உலகின் பொக்கிங்களாக இருந்துவருகின்றன. பல்லாயிரக்கணக்கான இதயங்களின் துடிப்பின் அடிநாதமாகத் திகழ்ந்துகொண்டிருக்கும் இவர், இலங்கை மருத்துவத்துறைக்கு கிடைத்த பெரும் சொத்து. இவர் உழைப்பிலும் தன்னலமற்ற சேவையிலும் உயர்விலும் இந்து அன்னையும் உயர்கிறாள் என்பதை மறுக்கமுடியாது.

இப்படி இலங்கை மருத்துவ உலகின் பொக்கிமாக சேவையாற்றிவரும் வைத்தியகலாநிதி மகேசன் குருபரன் அவர்களின் ஒப்பற்ற பணியைப் பாராட்டி கல்லூரியின் ஸ்தாபக தினமான விஜயதசமி நாளில் 'மகத்தான விருதினை' வழங்கி வைப்பதில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு பெருமையும் பேருவகையும் கொள்கிறது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் உலகலாவி, இந்து அன்னை மிடுக்குடன் நிற்கிறாள் என்றால் அதன் பின்னால் பலரது உழைப்பு கல்லூரிக்கு உள்ளும் வெளியும் இருந்திருக்கிறது. எந்த அளவிற்கு கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் கல்லூரி மீது பற்றுக்கொண்டிருக்கிறார்களோ அதேயளவு பற்றுடன் இந்துவின் பழைய மாணவர்களும் இருப்பதால்தான் இந்து அன்னை கல்வி உலகிலே வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கிறாள். அப்படி கல்லூரியின் வளர்ச்சியின் பின்னுள்ள பழைய மாணவர்களின் வரிசையில் தன்னையும் இணைத்து பாடுபட்டவர்தான் தம்பிமுத்து சச்சிதானந்தன் அவர்கள்.

பட்டயக்கணக்காளரான இவர் 30 வருடங்களுக்கு மேலாக யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பினூடாக இணைந்து இந்துக்கல்லூரியின் உயர்விற்கு பணியாற்றி வந்துள்ளார். இவர் நேர்மையையினதும், தன்னலமற்ற சேவையினதும் அடையாளமாகப் பதவிகள் அவரைத்தேடி வந்தன.

யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பினுடைய தலைவராகவும், பின் அதே சங்கத்தின் போசகராகவும், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியப் பொருளாளராகவும், பின்னர் அந்த நிதியத்தின் தலைவராகவும் இருந்து வருகின்றமை இவர் ஆளுமைத்திறனுக்கும் நம்பிக்கைக்கும் கல்லூரி மீதான தீராத பற்றுக்கும் எடுத்துக்காட்டு. தன் சொந்த நிதி மட்டுமன்றி தன் தனிப்பட்ட செல்வாக்கால் பலரது நிதிப்பங்களிப்புகள் யாழ். இந்துக் கல்லூரிக்கு அமைய காரணமாக இருந்தவர் இவர், தமிழ்நாட்டின் பிரபல பாடகர் ஜேசுதாஸ் அவர்களை அழைத்துவந்து கல்லூரிக்காக நிதி திரட்டியதில் இவரின் பங்கும் அளப்பெரியது என்றால் மிகையாகாது.

இப்படி உணர்வாலும் உழைப்பாலும் யாழ் இந்துக் கல்லூரிக்கு சேவையாற்றிய தம்பிமுத்து சச்சிதானந்தன் அவர்களின் ஒப்பற்ற பணியைப் பாராட்டி கல்லூரியின் ஸ்தாபக தினமான விஜயதசமி நாளில் 'மகத்தான விருதினை' வழங்கி வைப்பதில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு பெருமையும் பேருவகையும் கொள்கிறது.

# சுவாமி விபுலானந்தர் மற்றும் பாரதியாரின் திருவுருவச்சிலைகள் யாழில் திறந்து வைப்பு





யாழில் புதிதாக அமைக்கப்பட்ட சுவாமி விபுலானந்தர் மற்றும் பாரதியாரின் திருவுருவச்சிலை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை அகில இலங்கை சைவமகாசபை மற்றும் யாழ்.மாநகர சபையால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை சைவமா சபையால் உருவாக்கப்பெற்ற சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலை தென் கையிலை ஆதின குருமுதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணணால் திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ் மாநகர சபையால் உருவாக்கப்பெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடைய திருவுருவ சிலையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா மற்றும் யாழ் மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி றெமிடியஸால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென் கையிலை ஆதின குரு முதல்வர் தவத்திரு அகத்தியார் அடிகளார், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா, யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன் ,அகில இலங்கை சைவ மகாசபை தலைவர் நா.சண்முகரத்தினம், பொதுச் செயலாளர் பரா நந்தகுமார் ,பொருளாளர் அருள் சிவானந்தன், தமிழ்ச்சைவப்பேரவை பொது செயலர் மருத்துவர் சுதர்சன், மாநகர சபை உறுப்பினர்கள், சிவ தொண்டர்கள்,சிவமங்கையர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நபிகள் நாயகம் தினத்தையொட்டி அன்னதானம் வழங்கும் நிகழ்வு

நபிகள் நாயகம் அவர்கள் அவதரித்த மீலாத் தினத்தையொட்டி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டக்களப்பு காத்தான்குடி மன்பஉல் ஹைறாத் ஜும்ஆப் பள்ளிவாயலில் நபியவர்களின் புகழ்கூறும் மௌலூத் வைபவம் மற்றும் அண்ணதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வை காத்தான்குடி அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் தலைவர் மௌலவி அல்ஹாஜ் ஏ.ஜே.அப்துர் ரஊப் மிஸ்பாஹி ஆரம்பித்து வைத்தார்.

இதில் உலமாக்கள், பள்ளிவாயலின் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 15 தங்கப் பவுண் நகைகள் வல்லிபுர தேர்திருவிழாவில் திருட்டு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியவர்களிடம் 15 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவில் சனிக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெற்றது.


இதற்கமைய அன்று இரவு கிடைக்கப்பெற்ற 7 முறைப்பாடுகளின் அடிப்படையில் 15 தங்கப்பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை தமது நகைகள் மற்றும் பணம் தொடர்பில் முன் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலத்திரனியல் குறை கடத்திகளின் விநியோகத்துக்கு இந்தியாவை விரும்பும் அமெரிக்க முன்னணி நிறுவனம்



வயர்லெஸ் தயாரிப்புகள், தீர்வுகள் மற்றும் தொழில்நுட்பங்களில் உலகின் முன்னணி கண்டுபிடிப்பாளரான சான் டியாகோவை தளமாகக் கொண்ட அமெரிக்கவின் குவால்காம், அதன் குறைக்கடத்தி சப்ளையர்களை இந்தியா உட்பட பல்வேறு இடங்களுக்கு மாற்றவும், செல்லவும் தீவிரமாக அறிவுறுத்துகிறது.

இந்தியாவில் சமீபத்தில் 5G சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டதை, தொழில்நுட்பத்தை அதிகரிக்கவும், லத்தீன் அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா மற்றும் மேற்கு ஆசியா முழுவதும் உள்ள பிற வளரும் பொருளாதாரங்களில் அதன் பெருக்கத்தை செயல்படுத்தவும், மேலும் அனைத்து விலையிலும் சாதனங்களை கிடைக்கச் செய்யவும் உதவும் ஒரு ஊக்கிப் புள்ளியாக இந்நிறுவனம் கருதுகிறது..

செவ்வாயன்று பத்திரிக்கையாளர்கள் குழுவிடம் பேசிய குவால்காமின் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான கிறிஸ்டியானோ ஆர் அமோன், நிறுவனத்தின் சப்ளையர்கள் இந்தியாவில் தளங்களை அமைத்தால், அது அவர்களின் ஃபேப்களைப் பயன்படுத்தும். அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் இந்தியா ஆகியவை புவியியல் ரீதியாக பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் நெகிழ்வான குறைக்கடத்தி விநியோகச் சங்கிலியை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும், சாத்தியமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் நகல் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

“எங்கள் சப்ளையர்களிடம் பல்வகைப்படுத்துவதற்கான எங்கள் விருப்பம் மற்றும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்வதற்கான அவர்களின் திறனைப் பற்றி நாங்கள் மிகவும் தீவிரமாகச் சொல்லி வருகிறோம். எங்கள் சப்ளையர்கள் உருவாக்க உந்துதல் பெற்றால், இந்தியாவில் கட்டமைக்க அவர்களுக்கு சரியான சலுகைகள் இருந்தால், நாங்கள் அவர்களின் ஃபேப்பைப் பயன்படுத்தப் போகிறோம் – என்று அவர் கூறினார்.

இந்த புதிய உலகளாவிய குறைக்கடத்தி விநியோகச் சங்கிலியில் எவ்வாறு பங்கேற்பது என்பது பற்றி சிந்திக்க இந்திய அரசாங்கத்திற்கும் மற்ற அரசாங்கங்களுக்கும் இடையே நேர்மறையான விவாதங்கள் நடந்துள்ளன என்று நான் நினைக்கிறேன். இந்தியாவுக்கு முக்கிய பங்கு உள்ளது. இந்தியா தனது திறமையையும் அறிவையும் மேம்படுத்துவதில் தனது பங்கைக் காணும் நிலையில், நமது அளவை நாட்டிற்குக் கொண்டு வருவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவோம் – என்று கிறிஸ்டியானோ மேலும் கூறினார்.

குவால்காம் தலைமை நிர்வாக அதிகாரியின் கருத்துக்கள், நாட்டில் குறைக்கடத்தி மற்றும் காட்சி உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக ரூ. 76,000 கோடி ஊக்கத்தொகை திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ள நிலையில் – அதன் கீழ் அனைத்து தொழில்நுட்ப முனைகளினதும் திட்டச் செலவில் ஐம்பது வீத நிதியுதவி வழங்கப்படும் சூழலில் வந்துள்ளது.

இதுவரை, எலக்ட்ரானிக் சிப் மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி ஆலைகளை அமைக்க ஐந்து நிறுவனங்களிடமிருந்து அரசு முன்மொழிவுகளைப் பெற்றுள்ளது.

குவால்காம் சிப்செட்களை உற்பத்தி செய்யவில்லை, ஆனால் சாம்சங், குளோபல்ஃபவுண்டரிஸ் மற்றும் தைவான் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனம் போன்ற செதில் தயாரிப்பு நிறுவனங்களின் வசதிகளிலிருந்து அவற்றைப் பெறுகிறது.

இதுவரை, எலக்ட்ரானிக் சிப் மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி ஆலைகளை அமைக்க ஐந்து நிறுவனங்களிடமிருந்து இந்திய் அரசு முன்மொழிவுகளைப் பெற்றுள்ளது.

குவால்காம் சிப்செட்களை உற்பத்தி செய்யவில்லை, ஆனால் சாம்சங், குளோபல்ஃபவுண்டரிஸ் மற்றும் தைவான் செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனம் போன்ற செதில் தயாரிப்பு நிறுவனங்களின் வசதிகளிலிருந்து அவற்றைப் பெறுகிறது.


இந்தியாவில் **5G** சேவைகளை அறிமுகப்படுத்தியதில், கிறிஸ்டியானோ **5G** சாதனங்களை வெவ்வேறு விலைப் புள்ளிகளில் கொண்டு வர உதவும் என்றார். இந்தியாவில் **5G** வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பார்க்கும்போது, பல மற்றும் மிக முக்கியமான வாய்ப்புகளை நான் காண்கிறேன். அவை அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்கலாம். முதலாவது இந்திய அளவுகோல் ஒவ்வொரு சாதனத்திலும் வெவ்வேறு விலை புள்ளிகளில் **5G** தொழில்நுட்பத்தை கொண்டு வரும் என்றார். குவால்காம் இந்தியாவில் நீண்ட காலப் பிரசன்னத்தைக் கொண்டுள்ளது மற்றும் கிட்டத்தட்ட 18,000 ஊழியர்களைக் கொண்டுள்ளது, பெரும்பாலும் பொறியாளர்கள். இதில், கடந்த ஓராண்டில் 3,000 பேர் பணியமர்த்தப்பட்டனர். நிறுவனம் 100 ஸ்டார்ட்அப்களை (புதிய நிறுவனங்களை) ‘அடைகாத்து’ள்ளது. அத்தோடு தற்போது அதன் தொழில்நுட்ப தீர்வுகளுக்காக ஆட்டோமொபைல் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகிறது. நிறுவனம் மொபைல் துறையில் ஒரு தகவல் தொடர்பு நிறுவனத்திலிருந்து இணைக்கப்பட்ட செயலி நிறுவனமாக தனது கவனத்தை மாற்றுகிறது – என்றும் கிறிஸ்டியானோ கூறினார்.

# மோடி மற்றும் தலைவர்களைக் கொல்லச் சதி அயோத்தி, மதுராவைத் தகர்க்கவும் திட்டமாம்

## தடை செய்யப்பட்ட இயக்கம் தொடர்பில் முறைப்பாடு








மும்பை,ஒக்.10

பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களை கொல்வதுடன், அயோத்தி, மதுரா போன்ற கோவில்களை தகர்க்கப் போவதாக, தடை செய்யப்பட்டுள்ள பி.எவ்.ஐ. அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. இது தொடர்பாக, மஹாராஷ்டிராவைச் சேர்ந்த பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கு மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழகம், கேரளா, கர்நாடகாவில் இயங்கி வந்த சில முஸ்லிம் அமைப்புகள் இணைந்து, 2006 இல் பி.எவ்.ஐ. எனப்படும் ‘பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா’ என்ற அமைப்பை உருவாக்கின. முஸ்லிம்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு பயங்கரவாத செயல்களில், வன்முறை சம்பவங்களில் இந்த அமைப்பினருக்கு தொடர்பு உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு, பயங்கரவாதத்துக்கு நிதி உதவி அளிப்பது, நாட்டில் மத ரீதியில் மோதலை ஏற்படுத்த முயற்சியில் ஈடுபடுவதாக, இந்த அமைப்புக்கு எதிராக பல புகார்கள் எழுந்தன.

### அதிரடி சோதனை

இதையடுத்து, நாடு முழுதும் இந்த அமைப்பினருக்கு சொந்தமான நூறுக்கும் மேற்பட்ட வீடுகள், அலுவலகங்களில், என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு அமைப்பு கடந்த மாதம் அதிரடி சோதனையில் ஈடுபட்டது.

நாட்டுக்கு எதிராக செயல்படுவதற்காக இந்த அமைப்பு நன்கொடைகள் வசூலித்து வந்ததாகவும், நாசவேலைகளில் ஈடுபடுவதற்காக பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உதவி அளித்ததாகவும் வந்த புகார்களின்படி, அமலாக்கத் துறையும் விசாரணை நடத்தியது.

நாடு முழுதும் நடந்த சோதனைகளில், 270க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ், இந்த அமைப்புக்கு ஐந்து ஆண்டுகள் தடை விதித்து மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பை வெளியிட்டது. இந்த அமைப்பின் எட்டு துணை அமைப்புகள் மீதும் தடை விதிக்கப்பட்டது. மத்திய அரசின் இந்த நடவடிக்கையை தொடர்ந்து, மாநில அரசுகளும் இந்த அமைப்புக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளன.

இந்த அமைப்பின் அலுவலகங்கள் மூடப்பட்டு, வங்கிக் கணக்குகள் உள்ளிட்டவை முடக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புக்கு ஆதரவு தெரிவிப்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.இந்நிலையில், மஹாராஷ்டிரா மாநிலம் சோலாபூரைச் சேர்ந்த, பா.ஜ.கவின் எம்.எல்.ஏ. விஜயகுமார் தேஷ்முக், பொலிஸில் புகார் ஒன்று அளித்துள்ளார். அதில், தடை செய்யப்பட்ட பி.எவ்.ஐ., நிர்வாகி முகமது ஷாபி பிராஜ்தார் தனக்கு மிரட்டல் கடிதம் எழுதியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

புகாரில் அவர் கூறியுள்ளதாவது:–

பி.எவ்.ஐ., அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து, தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பல முக்கிய தலைவர்களை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுஉள்ளது.

உத்தர பிரதேசத்தின் அயோத்தியில் உள்ள ராமர் கோவில், மதுராவில் உள்ள கிருஷ்ணர் கோவில் உள்ளிட்ட முக்கிய கோவில்களை தகர்க்கப் போவதாக முகமது ஷாபி பிராஜ்தார் மிரட்டல் விடுத்துள்ளார். தலையைத் துண்டித்து என்னைக் கொல்லப் போவதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. இதில், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். –இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து சோலாபூர் பொலிஸார் விசாரிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## டிராக்டர் புரண்டதில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை டிராக்டர் தடம் புரண்டு விபத்துக் குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். இன்னுமொருவர் படுகாயமடைந்தார்.

சம்பூர் - கடற்கரைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிறிபால கஜன் (வயது 32) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வயல் உழவு வேலை செய்வதற்காகச் சாரதியும், உதவியாளரும் டிராக்டரில் பயணித்துக் கொண்டிருந்தபோது அது வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததாலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

படுகாயமடைந்த நபர் அதே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## காலி முகத்திடலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது பலர் ஓடிச் செல்ல முற்பட்ட போதும் பொலிஸார் அவர்களை துரத்தி துரத்திக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. அத்துடன் அங்கு குழுமியிருந்த பொதுமக்களிடத்திலும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவும் காலி முகத்திடலில் நடத்தப்பட்ட போராட்டம் மற்றும் அரசுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் பொருட்டும், அநீதிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட, பொலிஸார் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது பெருமளவான பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் ஆகியோர் களத்தில் குவிக்கப்பட்டனர்.

எதிர்ப்பு கோசங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்களை விலகிச் செல்லுமாறு பொலிஸார் வலியுறுத்தி வந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் திரும்பிச் செல்லாது எதிர்ப்புக் கோசங்களை எழுப்பினர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பத்து நிமிடங்கள் நேரம் வழங்கப்பட்டு அவர்களை விலகிச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இதையடுத்து, பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

அத்துடன், போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாதவிடத்து கண்ணீர்ப்புகைத் தாக்குதல் நடத்துவதற்கு பொலிஸார் உள்ளிட்டோர் தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்தே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## சொத்துக்களைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஏனையவர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சிலர் தங்கள் இருப்பிடங்களை கைவிட்டு வேறும் இடங்களுக்குச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீயிட்டவர்கள் உள்ளிட்ட சந்தேக நபர்கள் இவ்வாறு தலைமறைவாகியுள்ளனர் எனக் குற்ற விசாரணைப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் சொல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றை கட்டியெழுப்புவதற்காக வழங்கக் கூடிய பங்களிப்பு தொடர்பாக ஆராய்வதற்காகவே அவர் நாட்டுக்கு வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் ராஜதந்திரியான எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேயின் வெளிவிவகார ஆலோசகராக கடந்த 2000 ஆம் ஆண்டு நோர்வே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளராக செயற்பட்டு தனது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அந்தக் காலகட்டத்தில் அவரின் செயற்பாடுகளுக்கு தென்னிலங்கையில் சிங்கள பிரதான அரசியல் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர் தற்போது ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளராக செயற்பட்டு வருகிறார்.

## யாழில் தாக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் என யாழ்.பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்.பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், தாவடி பிரதேசத்தில் உள்ள வீடொன்றை சோதனையிட்ட போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 03 கூரிய வாள்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த சந்தேகநபர் யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் தனிநபர் தாக்குதல், மிரட்டல், காயப்படுத்துதல், திருடுதல் உள்ளிட்ட பல சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கைது செய்யப்பட்ட ஆயுதக் கும்பலைச் சேர்ந்த இருவரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது பிரதான சந்தேக நபர் பற்றிய தகவல்கள் தெரியவந்ததை அடுத்து பிரதான சந்தேக நபர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

தாவடி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக யாழ். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

## இலங்கையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடி காரணமாக மீண்டும் செயற்படுத்துவதற்கான சாத்தியம் உள்ளதாக அவர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வரும் பயங்கரவாதிகள் இலங்கையில் இருந்து இந்தியாவை தாக்கக் கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநில அரசாங்கத்தை இழிவுப்படுத்துதல், வதந்தியை பரப்புதல் மற்றும் அச்சத்தை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக குறித்த பொது நல வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## வீடு வீடாகத் தகவல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரட்டுவதை நிறுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தொலைபேசியூடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் தகவல்களை வீடு வீடாகச் சென்று பொலிஸார் பதிவு செய்வது தவறென ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என மனோ கணேசன் டுவிட் செய்துள்ளார்.

உடனடியாக இது தொடர்பில் உரிய பணிப்புரையை வழங்குவார் என ஜனாதிபதி இதன்போது மனோவிடம் உறுதியளித்துள்ளார் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

## 3 இராணுவ அதிகாரிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டுள்ளதால் இலங்கை இராணுவ அதிகாரிகள் உடனடியாக தடைகளை எதிர்கொள்ளவுள்ளனர் என்று கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

கனடாவே இது தொடர்பான முதல் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளது. கனடா மூன்று இராணுவ அதிகாரிகளிற்கு எதிராகத் தடைவிதிக்கலாம். இதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட பல நாடுகள் தடை நடவடிக்கைளை முன்னெடுக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. 20 நாடுகள் இதற்கு ஆதரவளித்துள்ளன.

முன்னைய தீர்மானங்களை போல இல்லாமல் இந்த தீர்மானம் இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அதனால் உருவாகியுள்ள மனித உரிமை விடயங்களிற்கு அதிகளவு முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் ஊழல்கள் குறித்து குறிப்பிடுவதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களை அரசாங்கம் கையாண்டவிதம் குறித்து கடும் விமர்சனத்தை முன்வைத்துள்ளது.

## தேர்தல் சட்டங்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தல் முறை தொடர்பிலான தெரிவுக்குழுவொன்றை முன்மொழிவதாகவும், அந்த தெரிவுக்குழு, அடுத்த வருடம் ஜூலை மாதத்திற்குள் தீர்மானம் எடுக்காவிட்டால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று (09) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தொழில் நிபுணர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையை நிராகரிப்பதால், அவர்கள் விரும்பிய அரசியல் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். அதன்படி, அடுத்த தேர்தலுக்கு முன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான (பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள்) உறுப்பினர்களின் எண்ணிக்கை 8,000 இலிருந்து 4,000 வரை குறைக்கப்படும் என்றும் மக்கள் சபை வேலைத்திட்டமும் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரதேச சபையின் நிறைவேற்று அதிகாரம் தவிசாளர் என்ற ஒற்றைத் தலைவருக்குச் செல்வதற்குப் பதிலாக தவிசாளர் தலைமையிலான குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், அடுத்த பிரதேச சபைத் தேர்தலுக்கு முன்னர் இந்தத் திருத்தங்களைச் செய்வதற்கு சட்ட வரைவு தயாரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியலில் ஊழல் தலைதூக்க முக்கிய காரணம் விருப்பு வாக்கு முறையே என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உடனடியாக விருப்பு வாக்கு முறையற்ற பட்டியல் முறை அல்லது கலப்பு முறை ஒன்றை (ஒற்றை மற்றும் விகிதாசார முறை) கொண்ட தேர்தல் முறைமைக்கு செல்ல வேண்டும் எனவும் தேர்தலில் செலவிடப்படும் நிதிக்கும் தேர்தல் சட்டம் மூலம் வரையறைகள் இடப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு கூறியவை வருமாறு:-

இன்று இந்த நாட்டில் இரண்டு பிரதான பிரச்சினைகள் உள்ளன. ஒன்று பொருளாதாரத்தின் வீழ்ச்சி. இரண்டாவது, நாட்டின் பெரும்பான்மையான மக்களால் இந்த நாட்டின் அரசியல் முறைமை நிராகரிக்கப்பட்டுள்ளமை ஆகும். இந்தப் பொருளாதாரச் சரிவு அரசியல் முறைமையினால் ஏற்பட்டது என்று பலர் கூறுகின்றனர்.

பொருளாதாரத்திற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாம் கதைத்துள்ளோம். ஆனால் அரசியல் வேலைத்திட்டத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இன்று எமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நாட்டின் அரசியல் முறைமை தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் தியவன்னா ஆற்றில் தள்ள வேண்டும் என்று கூறுகின்றனர். அவ்வாறு தனி நபர்கள் கூறவில்லை. அரசியல் முறைமையை ஏற்காததால்தான் அவ்வாறு கூறுகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் இந்தப் போராட்டங்களை அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கவில்லை. அரசியல் கட்சிகளின் போராட்டங்களுக்கு மக்கள் வரவில்லை. மக்கள் தனித்தனியாக முன் வந்தனர். துரதிர்ஷ்டவசமாக, மே மற்றும் ஜுன் மாதங்களில், ஒவ்வொரு அரசியல் கட்டமைப்பும் இந்த எதிர்ப்பு இயக்கத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டன. அதனுடன் வன்முறையும் வெடித்தது. வன்முறையின் மூலம் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி இடம்பெற்றது . அதனால் அன்றைய போராட்டம் வீழ்ச்சி அடைந்தது.

இந்த அரசியல் முறைமை மாற்றப்பட வேண்டும் என்று மக்கள் தற்போதும் கூறுகின்றனர். வன்முறையை யாரும் விரும்புவதில்லை. இதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த மனோபாவத்தை மாற்றிக்கொண்டே நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

கட்சி முறைமையினால் நாடாளுமன்றத்தில் இன்று பல்வேறு குழுக்கள் உருவாகியுள்ளன. நான் ஜனாதிபதியாவதற்கு ஆளுங்கட்சியின் ஆதரவைப் பெற்றேன். இது ஓர் இரகசியம் அல்ல. சிறு பகுதியினர் மற்ற வேட்பாளர்களுக்கு வாக்களித்தனர். மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எனக்கு வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் எனக்கு வாக்களித்தனர். அதனால் எனக்கு இரு தரப்பிலும் வாக்குகள் கிடைத்தன.

குறுகிய கட்சி பேதமின்றி மக்கள் நலனுக்காக நான் பணியாற்றுகிறேன். தற்போது எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்க, நாடாளுமன்றத்தில் தேசிய சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழுக்கள் போன்ற குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இவற்றை நிறைவு செய்ய முடியவில்லை. சிலர் தேசிய சபையில் இணைந்துள்ளார்கள். சிலர் வருவதில்லை. அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவார்கள் என்றே நாடு எதிர்பார்க்கிறது. நாம் இத்தோடு நின்றுவிடக் கூடாது.

மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை சிந்தித்து அதன்படி செயல்பட வேண்டும். கிராம மட்ட அரசியலால் மக்கள் சலிப்படைந்து விட்டமையால் இன்று புதிய கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். அது அரசாங்கமல்ல, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, மக்கள் சபை முறையை முன்வைத்துள்ளார். ஒவ்வொரு தொகுதியிலும், அந்த கிராமத்தில் உள்ள பொது அமைப்புகளை ஒருங்கிணைத்து, ஒரு குழுவாக பணிகளை செய்ய வேண்டும். அதுதான் மக்கள் சபை ஆகும். அந்த முறை நல்லது. இந்த அமைப்பு முன்பு கிராமோதய சபை என்ற பெயரில் இருந்தது. அது அரசாங்கத்துடன் தொடர்புடைய தொன்று. இது அரசாங்கத்துடன் தொடர்புடையது அல்ல. இந்த மக்கள் சபைத் திட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கிறோம்.

மக்கள் சபைகள் இயங்கும் போது பிரதேச சபைகளுடன் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். மக்கள் சபைகளை அகற்ற பிரதேச சபைகளுக்கு அனுமதி இல்லை. நாம் எப்படி இணைந்து செயல்பட வேண்டும் என்பதைத் திட்டமிட வேண்டும். பிரதேச சபை முறைமை தொடர்பில் பல கேள்விகள் உள்ளன. பல பிரதேச சபைகள் இலாபம் கூட பெறுவதில்லை. வரிப்பணத்தை நம்பி இருக்கிறார்கள். பணம் பெறும் நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் சம்பளம் வழங்குவதற்கு அப்பணத்தை பயன்படுத்துகின்றன. எனவே இந்த முறையைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

ஆனால் கடந்த முறை நான்காயிரம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், எட்டாயிரமாக அதிகரிக்கப்பட்டனர். நாடு அவ்வாறு கேட்கவில்லை.கட்சித் தலைவர்கள் ஒன்று கூடி இந்த பணியை செய்தார்கள். எனவே, அடுத்த தேர்தலுக்கு முன்னர் எட்டாயிரத்தை நான்காயிரமாக குறைக்க வேண்டும். பாராளுமன்றத்தில் அந்தச் சட்டங்களைத் திருத்துவோம். இந்த திட்டத்தை அங்கிருந்து ஆரம்பிக்கலாம். மேலும் மற்றொரு அவசர திருத்தம் உள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சட்டங்களை மாற்றியமைத்த ..........

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரதேச சபைகளின் நிறைவேற்றுத் தலைவர்களாக தவிசாளர்கள் உள்ளனர். இதற்குசிலர்எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றனர். பிரதேச சபை முறைக்கு முன்னர், நகர சபைகள் மற்றும் கிராம சபைகள் இருந்தபோது அத்தகைய அதிகாரம் இருக்கவில்லை. எனவே பிரதேச சபைகளின் நிறைவேற்று அதிகாரத்தை நிறைவேற்றுக்குழுவிற்கு வழங்குவோம்.

அதன் தலைவர் தான் பிரதேச சபையின் தவிசாளர். இப்போது நிதிக் குழுக்கள் உள்ளன. அவ்வாறானஒருநிறைவேற்றுக் குழுவை உருவாக்குவோம். அடுத்த பிரதேச சபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த இரண்டு விடயங்களையும் நிறைவேற்ற வேண்டும். அதற்குத் தேவையான சட்ட வரைவை தயார் செய்யுமாறு அமைச்சர்களுக்கு அறிவித்துள்ளோம்.

மேலும் விருப்பு வாக்கு முறையை பலர் விரும்புவதில்லை. விருப்பு வாக்கு முறைமை பற்றி யாரும் முதலில் சிந்திக்கவில்லை. ஜே.ஆர்.ஜயவர்தன அவர்கள் மிக ஆழமாக சிந்தித்து 1975 இல் பட்டியல் முறையை முன்மொழிந்தார்.அது ஏனைய கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது . அதன்படி நாம் நகர சபைத் தேர்தலை நடத்தினோம். மாநகர சபைத் தேர்தல் நடந்தது. மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடைபெற்றது. அந்த முறைமையை வெற்றிகரமாக நாம் முன்னெடுத்துச் சென்றோம். ஆனால் 1988 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இருந்த கட்சிகள் திடீரென பட்டியல் முறைக்குப் பதிலாக விருப்பு வாக்கு முறையைக் கொண்டுவர முடிவு செய்தன. ஒரு விருப்பு வாக்கு அல்ல, 03 விருப்பு வாக்குளை வழங்க யோசனை முன்வைக்கப்பட்டது. அதேபோல், 196 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 ஆக அதிகரித்தனர்.

இந்நாட்டு அரசியலில் ஊழல் மோசடிகளுக்கு முக்கிய காரணம் விருப்பு வாக்கு முறையே ஆகும். எனவே நாம் புதிய தேர்தல் முறையொன்றைத் தயார் செய்ய வேண்டும். விருப்பு வாக்கு முறை இல்லாத பட்டியல் முறை அல்லது கலப்பு முறை (ஒற்றை மற்றும் விகித முறை) இவ்விரண்டில் ஒன்று பற்றி கலந்துரையாடிய பின்னர் ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் தீர்மானம் எடுத்து புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும்.

அப்போது பொருத்தமான நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்று கட்சிகளிடையே உடன்பாடு இல்லை. பிரதான கட்சிகளுக்கு ஒன்று கூறுகின்றனர். சிறிய கட்சிகளுக்கு ஒன்றை கூறுகின்றனர். இப்படி முன்னோக்கிச் செல்ல முடியாது. அரசியல் கட்சிகள் இது தொடர்பில் தீர்மானத்தை எடுக்க வேண்டும். நான் நீதி அமைச்சருடனும் கலந்துரையாடினேன். நாம் நாடாளுமன்றத் தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானிப்பதற்கு தெரிவுக் குழுவொன்றை முன்மொழிய இருக்கிறோம். இதை தள்ளிப் போட முடியாது.

ஏனெனில் ஜூன் அல்லது ஜூலை மாதத்துக்குள் தீர்மானமெடுக்க முடியாவிட்டால், நான் எந்த முறை சிறந்தது என்று மக்களின் கருத்துகளைப் பெற சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவேன். இது பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும். அந்த முறை குறித்து பேசப்பட்டு வருகிறது. கலந்துரையாடி பொருத்தமான ஒரு முறை தெரிவு செய்யப்படும். எனவே நாடாளுமன்றத்தின் தெரிவுக் குழு அது தொடர்பான செயற்பாடுகளை நிறைவு செய்ய வேண்டும். இல்லையென்றால் நான் இது தொடர்பான பொறுப்பை மக்கள் முன்னிலையில் விட்டுவிடுவேன். நாம் இதிலிருந்து விலகிச் செல்ல முடியாது. நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இன்று தேர்தலுக்காக அதிக பணம் செலவிடப்படுகிறது. நான் 77 இல் பழைய முறையில் தான் தேர்தலில் போட்டியிட்டேன். அப்போது செலவு கட்டுப்படுத்தப்பட்டது. இன்று, சிலர் தேர்தலுக்காக 20 - 30, 50 மில்லியன் செலவிடுகின்றனர். இவற்றை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது? இந்த தேர்தல் முறையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடைபட்டுள்ளனர்.

அப்படியானால், தேர்தல் சட்டத்தின் மூலம் தேர்தலுக்குச் செலவழிக்கக்கூடிய பணத்திற்கு வரையறைகள் வேண்டும். 77 இல் தேர்தலில் நான் போட்டியிட்ட போது அந்த வரையறைகள் இருந்தன. அப்படித்தான் எமக்கு பணியாற்ற வேண்டியிருந்தது. போஸ்டர் ஒட்ட முடியவில்லை. அப்படியானால், தேர்தலில் செலவிடப்படும்பணத்துக்குக் கட்டுப்பாடுகள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மற்றுமொரு விடயமும் இருக்கிறது. இன்று நமது அரசியல் கட்சிகளில் இளைஞர்கள் இல்லை. பலர் பழையவர்களுடன் பெயரளவில் வேலை செய்கிறார்கள். அப்படியானால், அரசியல் கட்சிகளின் யாப்பு, அவற்றின் செயல்பாடு, உறுப்பினர்களை சேர்ப்பது எப்படி, மத்திய குழுக்களைத் தேர்ந்தெடுப்பது, எப்படி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது என்று விடயங்கள் குறித்தும் தனியான சட்டம் முன்வைக்கப்பட வேண்டும். தற்போது ஜேர்மனி போன்ற நாடுகளில் அரசியல் கட்சி சட்டம் என்று சட்டங்கள் உள்ளன. அதன்படி செயல்பட வேண்டும். நிதி வசூலிப்பது எப்படி, நிதி வசூலிக்க முடியாத சந்தர்ப்பங்கள் என்ன என்பதற்கான விதிகள் உள்ளன. அப்போதுதான் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட முடியும். அதற்கு எதிராக யார் வேண்டுமானாலும் நீதிமன்றம் செல்லலாம். வெளிப்படைத்தன்மை இருப்பதால், தேர்தல் செலவுகளுக்கு கட்டுப்பாடுகள் இருப்பதால் அந்த நாட்டு நாடாளுமன்றம், அரசியல் கட்சிகளுக்கு பணம் கொடுக்கின்றன. தேர்தலுக்கும் பணம் வழங்கப்படுகிறது. தனியார் நிறுவனங்களில் இருந்து பெறாமல் நாடாளுமன்றத்தினால் பணம் கொடுப்பது நல்லது. அவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவிலும் இந்த முறை உள்ளது. அப்படியானால், இந்தச் சட்டங்களை நாமும் கொண்டு வர வேண்டும். அதுபற்றி ஆலோசனைகளை வழங்க தனியான ஆணைக்குழு ஒன்றை நியமிக்க எதிர்பார்க்கிறேன். இவை அனைத்தும் அடுத்த வருடத்துக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு புதிய பொருளாதாரத்துடன், ஒரு புதிய அணுகுமுறை இருக்க வேண்டும். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் செயல்பட முடியாது என சிலர் குற்றம் சாட்டுகின்றனர். அவர்கள் ஒழுக்கத்தை மீறியிருந்தால் உறுப்பினர்களுக்கு எதிராகச் செயல்பட முடியும்.

இதை எப்படியாவது வலுப்படுத்துவதற்காக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் செய்வது போல், உறுப்பினர்களின் நடத்தை மற்றும் நெறிமுறைகள் குறித்த விதிகளை நாடாளுமன்றத்தில் முன்வைப்பேன். அதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும். இங்கிலாந்தில், Parliamentary Standard Act சட்டம் உள்ளது, அவ்வாறு செயல்படவில்லை என்றால், அது குறித்து அறிவிக்கப்படும். அப்படித் அறிவிக்கும் போது மக்கள் ஆணை காரணமாக வெளியேற்றப்படுவார்கள். வேறு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அண்மையில் கூட ஒருவர் விவாதத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்த விதிகள், கட்டுப்பாடுகள் அனைத்தையும் கொண்டு வந்து இந்த திருத்தங்களைச் மேற்கொண்டால் மக்களின் நம்பிக்கையைப் பெறலாம். அப்போது அடுத்த தேர்தலில் பலர் வாக்களிப்பார்கள். 85 வீதமானோர் வாக்களிக்க வேண்டும். மனப்பாங்கு ரீதியான மாற்றம் ஏற்பட வேண்டும். இன்னும் ஊர்வலம் செல்வதால் எந்தப் பயனும் இல்லை. இப்போது என்ன நடந்திருக்கிறது என்றால் அரசியல் கட்சிகள் தமக்கு ஆதரவைப் பெறுவதற்காக போராட்டத்தின் பக்கம் சாய்ந்துள்ளன. போராட்டம் அரசியல் கட்சிகளில் சார்ந்து இல்லை. மக்களின் அபிப்பிராயங்களுக்கு ஏற்ப விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கொண்டுவந்து நாடாளுமன்றத்திற்கு மக்கள் விரும்புபவர்களை நியமிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இந்த வேலையைத்தான் எதிர்காலத்தில் நாம் செய்ய வேண்டும். - என்றார்.

இந்நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, சிரேஷ்ட உப தவிசாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான அகில விராஜ் காரியவசம், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் ஆஷூ மாரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுனில் சாந்த மற்றும் சட்டத்தரணிகள், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் உள்ளிட்ட நிபுணர்கள் பலர் கலந்து கொண்டனர்.






# இலங்கையின் அனைத்து சமூகங்களும் மறுப்பின் அடிப்படையில் பொய்யை அடிப்படையாகக் கொண்டுவாழ்வதை நிறுத்தவேண்டும்!

## உலகத் தமிழர் பேரவை வேண்டுகோள்

கொழும்பு, ஒக் 10

இலங்கையின் அனைத்து சமூகங்களும் மறுப்பின் அடிப்படையிலான பொய்யை அடிப்படையாக கொண்டு வாழ்வதை நிறுத்தவேண்டும் என உலக தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கடும் எதிர்ப்பு இன்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையை உலகத் தமிழர் பேரவை வரவேற்றுள்ளது.

இலங்கைக்கு ஆதரவாக பாரம்பரியமாக வாக்களித்திருக்கக் கூடிய நாடுகள் பல இலங்கையின் நிலைவரத்தின் தீவிரத்தன்மைஷ்யை உணர்ந்து வாக்கெடுப்பைத் தவிர்க்கத் தீர்மானித்தமை திருப்தியளிக்கின்றது எனவும் உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பாரதூரமான விதத்தில் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு தசாப்தகாலமாக நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டும் செயற்பாடுகள் மிகவும் மந்தகதியிலானவையாகக்காணப்பட்டாலும்ஐக்கியநாடுகள்மனித உரிமை பேரவை தொடர்ந்தும் நம்பிக்கையை அளிப்பதாக காணப்படுகின்றது என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு காரணமான மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் பிரிட்டன் தலைமையிலான இலங்கை தொடர்பான முதன்மை நாடுகள் தீர்மானத்துக்கு வாக்களித்த அல்லது இணை அனுசரணை வழங்கிய நாடுகள் இந்த நோக்கத்திற்காக குரல்கொடுத்த மனித உரிமை அமைப்புகள் மிக முக்கியமாக நீண்டகாலம் கடந்துள்ள போதிலும் ஆபத்துக்கள் உள்ளபோதிலும்பொறுப்புக்கூறலிற்காக துணிச்சலுடன் போராடுவதன் மூலம் தொடர்ந்தும் உத்வேகத்தை அளித்து வருகின்ற இலங்கையில் உள்ள பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அனைத்து முற்போக்கு சக்திகளுக்கும் நன்றியைத் தெரிவிப்பதாக உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கை யுத்த கால பொறுப்புக்கூறலிற்கு தீர்வைக் காண்பதில் முழுமையாக தோல்வியடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றது, தகவல்கள் மற்றும் ஆதாரங்களைச் சேகரித்தல் ஒருங்கிணைத்தல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் எதிர்கால பொறுப்புக்கூறல்கள் செயல்முறைகளுக்கான உத்திகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆணையை விஸ்தரிப்பதுடன் திறனை வலுப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சாத்தியப்பாடுகளில் உலகளாவிய அதிகார வரம்பு சர்வதேச நியாயாதிக்கம் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக தடைகளை விதித்தல் ஆகிய சாத்தியப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இந்தியா வாக்களிக்கப்பதை தவிர்த்துள்ள போதிலும் தமிழ் மக்களின் நீதி, சமாதானம், கௌவரம், சமத்துவம் ஆகியவற்றுக்கான வலுவான அறிக்கை தொடர்பாக நாங்கள் திருப்தியடைகின்றோம் எனத் தெரிவித்துள்ள உலகத் தமிழர் பேரவை, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக போதாமைகளை இந்தியா அங்கீகரித்துள்ளமை மாகாணசபைகளுக்கு கூடிய விரைவில் தேர்தலை நடத்துவது அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வு ஆகியவற்றுக்காக அழைப்பு விடுத்துள்ளது,

பொருளாதார நெருக்கடிகளின் போது முன்னொரு போதும் இல்லாத உதவியை வழங்கிய வாக்கெடுப்பை தவிர்த்துக்கொண்ட இந்தியாவின் நல்லெண்ணத்தை தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் பொருளாதார அபிலாகைளைப் பாதுகாப்பதற்காக ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தவேண்டும். – என்றுள்ளது.

## யூரியா உரத்தை இறக்குமதி செய்ய புதிய விலைமனு கோரல்

பெரும்போகத்துக்குத் தேவையான யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்காக 03 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முதலாவது விலைமனு கோரல் தோல்வியடைந்ததையடுத்து இந்த புதிய விலைமனு கோரலொன்றுக்கு சென்றதாக விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இரண்டாவது விலைமனு கோரலின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 03 நிறுவனங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மத வழிபாட்டு தலங்களுக்கு மின் கட்டணத்தில் சலுகை!

மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணத்தில் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 180 அலகுக்கும் அதிக மின் பாவனையைக் கொண்ட வழிபாட்டுத் தலங்களில் அலகொன்றுக்கு 32 ரூபா அறவிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொன்.இராமநாதன் – லீலாவதி நினைவுப் பேருரைகள் இன்று




யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து நடைபெறும் மரபார்ந்த நிகழ்வுகளின் வரிசையில் சைவப் பெருவள்ளலார் சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையும் இன்று 10 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகவுள்ள சைவப் பெருவள்ளலார் சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்வில் யோகா உளவியலும் – மானுடர் வாழ்வும் என்ற தலைப்பில் முன்னாள் கலைப் பீடாதிபதியும், மெய்யியல் துறையின் முன்னாள் தலைவருமான வாழ் நாள் பேராசிரியர் என். ஞானக்குமரனும் –

பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையில் சுதேசிய சமூக உருவாக்கம்: பத்திரிகைகளின் பங்களிப்பு குறித்த ஓர் உசாவல் என்ற தலைப்பில் தென் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் மொழிகள் துறையைச் சேர்ந்த தமிழ்த்துறை இருக்கைப் பேராசிரியர் எம். ஏ. எம் றமீஸும் உரையாற்றவுள்ளனர்.

## குப்பிளான் தாயகம் கல்விநிலையத்தின் பரிசளிப்பு நிகழ்வில் சுமந்திரன் எம்.பி.!



குப்பிளான் தாயகம் கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பும் வாணி விழா நிகழ்வும் நேற்று (ஞாயிற்றுக் கிழமை)குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தாயகம் கல்வி நிலைய இயக்குநர் எம்.எஸ்.றஜந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும் சிறப்புவிருந்தினராக கமநல அபிவிருத்தி திணைக்கள கணக்காளர் கு.சுரேஸ்குமாரும் கௌரவ விருந்தினர்களாக சமாதான நீதிவான்களாகிய செ.நவரத்தினராசா, சோ.பரமநாதன் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் க.பொ.த. சாதாரணதரத்தில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று உயர்தரம் கற்பதற்குத் தெரிவான நிறுவனத்தில் கற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்களும் பெறுமதிமிக்க பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## பதில் பிரதம நீதியரசராக அலுவிஹாரே பதவியேற்பு!



பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி புவனெக்க பண்டுகாபய அலுவிஹாரே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

பதவிப் பிரமாணம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

## மக்கள் நீதி மய்ய மாநில பிரிவு செயலாளர் தமிழர் கூட்டணி சங்கரியைச் சந்தித்தார்!





பத்மஸ்ரீ கமலஹாசனின் மக்கள் நீதி மய்ய மாநில பிரிவு செயலாளரும், சட்டத்தரணியுமான எம்.ஸ்ரீதர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தமிழர் விடுதலைக் கூட்டணியின்செயலாளர்நாயகத்தைசந்தித்துகலந்துரையாடியிருந்தார்.

மேந்படி சந்திப்பு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, சமகால அரசியல் நிலை மற்றும் எதிர்காலஅரசியல்நிலைமைகள்தொடர்பில்கலந்துரையாடப்பட்டது.

ஈழத்தமிழர் பிரச்சினை, தமிழர் அரசியல் நிலை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஈழத்தமிழர் விடயம் தொடர்பில் இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் தமிழக அரசியல்வாதிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2022இல் வெளியிடப்பெற்றது.